

ஸாதனை
ஞானவரிஷி

காணிக்கை

உ

உலகம்
உய்ய உபதேசம்
செய்து வரும் ஞான
குருவும், என்னைத்தடுத்தாட்
கொண்டருளிய தெய்வமுமான
குருநாதர் தவத்திருசுவாமி தயானந்த
சரஸ்வதி அவர்களின் திருவடிகளில் இந்த
"ஸாதனா" மாத இதழைக் காணிக்கை
யாக்குகிறேன். 75-ம்ஆண்டுமுதல் என்னோடுசேர்ந்து
கீதாஞான யக்ஞங்களின் மூலம் வேதாந்த விசாரம்
செய்து வரும் அன்பர்களுக்கு குருநாதரின் ஆசியுடனும்
அருளுடனும் இதைப்பிரசாதமாக வழங்கி பெருமகிழ்ச்சி
யடைகிறேன்.

கீதையின் பணியில்
தங்கள் அன்பான,
ஸங்கீதனா

ami Dayananda Saraswati

மனித வாழ்க்கையால் அடைய வேண்டிய
பொருள்களெல்லாம் அடையலாம்,
சாதனையினால். அடையும் வழிதான்
சாதனம். அறம், பொருள், இன்பம்
என்ற இம்மூன்றும் சாதனத்தைக்
கொண்டு தான அடைய வேண்டியவை.
வீடு என்ற நான்காவதாகவும், முக்ய-
மாகவுமுள்ள இது மனிதனின்
தன்னிலை ஸ்வரூபமாக அடைந்த
பொருளாக வெளியாகிறது. அதை
அடைவது என்பது அதை அப்படியே
அறிந்து கொள்வது தான். அந்த
அறிவுக்கு வேண்டியது விசாரம்
அதுதான் இந்த சாதனைவான்
சாதனையாக ஆகட்டும்.

தயானந்தா.

Purani Jhadi, Muni-Ki-Reti (Tehri Garhwal) RISHIKESH 249 201

வழங்குகிறோம்!!

(கௌரவ ஆசிரியர் ; ல. சண்முகசுந்தரம்,)

பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இன்று மங்கலமான நாள் பொங்கல் திருநாள்,

நமது வீடும், மனமும், நாமும், நம்மைச் சுற்றி உள்ளவர்களும் புத்தொளி பெற்றுப் பொலிவுடன் உயரும் புண்ணிய நாள்.

நெல்லும் கரும்பும் வாழையும் தெங்கும் மாவுமாக நமது பூமி முழுவதும் பூத்துக் குலுங்குகின்றன. ஆறும் குளமும் ஏரியும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்துப் பூரித்து நிற்கின்றன

பசுக்கள் குடங்குடமாய் பால் சுரந்து பொங்கு கின்றன. அன்னை கலைமகளின் ஆனந்த மயமான அருள் முருவலைப் போல ஒவ்வொரு வீட்டு முற்றமும் கோலம் கோலமாய் கொஞ்சி விளையாடுகின்றன.

பாலமுதமும் நெய்யமுதமுமாகப் பொங்கல் பானைகள் ஒய்யாரமாய்க் கொலு வீற்றிருக்கின்றன.

சூரியபகவானுடைய பொற்கிரணங்களால், குத்து விளக்கும், கோலமும், வாழை இ[illegible]யும், காயும், கரும்பும், இ[illegible] நீரும், புஷ்பமும், பொங்க[illegible] பானையும், கனியும், பெண்[illegible]ளும், குழந்தைகளும், பசுவு[illegible] நாம் எல்லோருமே தங்க ம[illegible]மாக ஜொலிக்கிறோம்,

இந்தத் தங்க மயமான ம[illegible]கள வேளையில் உங்களுடை[illegible] கரங்களில் **ஸாதனா** ஒய்யா[illegible]மாய் அமர்ந்திருக்கிறது, உங்[illegible]ளுடைய கண்கள் ஸாதனாவை[illegible] அதன் தோற்றத்தை - வடி[illegible] அலங்காரத்தை, நேர்த்தி[illegible] சொகுசை பார்த்து ஆனந்தி[illegible]கின்றன. உங்களுடைய ம[illegible]மோ ஒவ்வொரு கட்டுரைக[illegible]யும், கதைகளையும், பாடல்க[illegible]யும், விளக்கங்களையும் அனு[illegible]வித்து அனுபவித்து பேரான[illegible]தத்தில் திளைக்கின்றன.

தெளிந்த மெய் யுணர்வு[illegible] நெறிமுறைபிறழாத நீதிமு[illegible]யும், தன்னையே மற்றவர்க[illegible] வாழத் தியாகஞ் செய்து இ[illegible]புறும் கருணையும் நிறைந்த உ[illegible]தமர்கள் இருந்தாலே போது[illegible] அவர்களுடைய அருளான[illegible] நாட்டையும் ,உலகையும், ந[illegible]

மையும் பாதுகாத்துக் கொண் டே இருக்கும்.

அருளாளர்கள் தங்களுடைய அனுபவங்களையும் ஆனந்தத் தையும் மற்றவர்களுக்கு வாரி வாரி வழங்குவார்கள்.

தங்களுடைய அனுபவங்க ளும், ஆனந்தமும் மண்ணோடு மண்ணாய், காற்றோடு காற்றாய் மறைந்து விடாதபடி, நிலை பெற்று நிற்கப் பாதுகாத்து வைப்பார்கள்.

மக்கள் உய்வதற்காகச்செயற் கரும் செயல்களைச் செய்வது தான் அவர்கள் வாழ்க்கை. அவ ர்களுடைய செயல்களில் அவர் களுடையஅனுபவங்களும்ஆன ந்தங்களும் வாடாமல் என் றென்றும் ஒளி வீசிக்கொண்டி ருக்கும்.

அவர்கள் என்றென்றும் தங் கள் செயல்களிலும் படைப்புக ளிலும் நிலைபெற்றுக் கொலு வீற்றிருப்பார்கள். அவர்களு டைய மெய்யுணர்வுகளும் விள க்கங்களும் நமக்கு வழிகாட்டும் தெய்வ விளக்குகள்.

மேலும் மேலும் ஒவ்வொரு துறையிலும், ஏன் நம் வாழ்க் கையிலுமே முன்னேறு வதற் குரிய மூலமந்திரங்கள் தாம், முன்னோர்களின் பொன்னுரை கள்.

கலைமணங்கமழும் பெரியோர் களின் அனுபவங்கள், கதைக ளாகவும், கட்டுரைகளாகவும், கவிதையாகவும், கடிதமாகவும் ஸாதனாவைப் பொலி வூட்டு கின்றன.

வாழ்க்கையில்தன்நம்பிக்கை யும், ஈடுபாடும், முன்னேற்ற மும் ஏற்பட வேண்டுமானால் அதற்குரிய சிறந்த சாதனம் கலைதான். உண்மையான கலை யின் மூலம்தான் மனித சமுதா யம் இடையூறுகளை வென்று வாழ்க்கையை வளமாக்க முடி யும்,

உண்மையான கலையை உண் மை உணர்ச்சியோடு தமிழ் மக் களுக்கு வழங்குவதுதான்ஸாத னாவின் குறிக்கோள்.

தன்னுடைய குறிக்கோளை பெரும் தமிழ்ச் சமுதாயத்தின் பார்வைக்குக் காணிக்கையாக வைக்கிறது ஸாதனா.

கௌரவ ஆசிரியர்

ஸாதனா

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

Sanathana Sasthralaya
"Vasuki illam"
Asbestos Road, Mettur
Podanur Post. Coimbatore 641023



வாழ்க தமிழ் !   வளர்க பாரதம்

அழைக்காமல் வேண்டாமல் தானே வந்திங்
கரும்பபசிக்கு மருந்தளிக்கும் தாயைப் போல
உழைக்கின்ற சமுதாயச் சந்தை தன்னில்
ஒய்வில்லா சாகரத்தில் உழல்வோருக்கு
விழைவிருந்து ஞானமெனும் விருந்து, கீதை
வேள்வியெனும் பெருவிருந்து தந்தார்! கோடை
மழைபோன்ற சஞதனற்கு நன்றி! எங்கள்
மனப்புழூதி அடங்கியதால் சொல்லு கின்றேன்!

கண்முன்னே நிற்பவரும், தானும், முன்னே
காண்கின்ற எதிரிகளும் சராச ரத்தில்
மண்மீது தோன்றியவை அனைத்தும், கீதை
மாமாயன் வடிவந்தான் என்று ணர்ந்த
நுண்ணுணர்வு கீதையினை யுகயு கங்கள்
நுவலறிய தத்துவத்தை கோமுகிப் பாய்
மண்மீது பள்ளியெனும் குருஷேத்திரத்தில்
மனதினிக்கத் தந்தவரை மறக்கப் போமா?

ஸாதஞ

எப்போதும் குளிர்ந்திருக்கும் கோவை தன்னில்
இயல்பான பிறப்பெடுத்து, காவி ரிப்பாய்
ஒப்பில்லா திருச்சியிலே வாழ்ந்து,வாழ்க்கை
உண்மையிலே மாமாயத் தெளிவு பெற்று.
செப்பரிய வடபுறமும் அயலும் சென்று
சிந்தையினுல் நிர்வாண மாகி, ஞானக்
கப்பலிலே கடல்வாழ்க்கைப் பயணம் செய்யும்
கனகமணி ரத்தினத்தைப் போற்று கின்ருேம்!

அரசமர இலேக்காட்டி, வானில் தோன்று
அம்புலியைக் காட்டுதல்போல், வாழும்வாழ்க்கை
கரிசனத்தை மிகஎளிய சொற்கள் கொண்டு
கடைவிரித்து, வேதமெனும் பொருளே விற்கக்
குரல்கொடுக்கும் புதுத்துறவி! மஞ்சள் வண்ண
கோலமிகும் பொன்னுடை ஞானி! கண்ணன்
வரம்பெற்ற அர்ஜுனனேப் போற்று கின்ருேம்
வடியாத ஜீவநதிச் செயல்கள் வாழ்க!

பறவையினம் விதைப்பதிலே! சேர்ப்பதில்லே!
பசியென்னும் துன்பமென்றும் அவற்றிற் கில்லே!
உறவெல்லாம் மறந்தவர்க்கு சுற்று கின்ற
உலகெல்லாம் உறவாகும்! கீதா யஞ்னம்
தரிசுமனம் அத்தனேயும் பக்தி யென்னும்
தழைக்கின்ற பயிர்விளேயச் செய்யும் கீதை
முரசறையும் தவயோகி நீடு வாழ்க!
மோகமன ஞாலத்தார் துணேயாய் வாழ்க!

வேதாந்த விளக்கான கீதைக் கிங்கே
விளக்கங்கள் தந்தவர்கள் கோடி! பற்றின்
ஆதியந்தம் அறவிடுத்த சங்க ரர்தம்
அத்துவித பெருவிளக்கம்! விசிஸ்டாத் வைத
போதகன்ரா மாநுஜர்! சீர் இந்து தர்மம்
போதித்த ரமணர்வரை அனேகர்! இன்று
வேதத்தின் உட்பொருளே விளக்கு கின்ற
வீரர்சனு தனாராகுவர் வியப்பொன் றில்லே!

ஐம்பூத அடக்கமிந்த உலகம்! தாக
ஆசைஉடல் பிறந்திறக்கும்! ஆன்மா என்னும்
செம்பொன்னே இறப்பென்னும் நெருப்பால் வெந்து
சிதருமல் புதுபிறப்பாய் அணியாய் ஆகும்

ஸாதனு

நம்மாலே ஆவதெது? சரணத் திற்கோர்
நாயகனே துணையென்று, தர்மம் காத்தால்
அம்புவியின் சோகமெலாம் அடங்கும்! என்னும்
அருங்கீதைக் கருத்துமழை பொழிக வெல்க!

சேற்றினிலே இருந்தாலும் பிள்ளைப் பூச்சில்
சிறிதேனும் உடலொட்டா தன்மை யைப்போல்
சாற்ற வொணு துன்பமிகு சம்சா ரம்இச்
சாகரத்தில் இருந்தாலும், ஆழ்ந்தி டாமல்
ஊற்றுகும் அறிவுமய மாயிருக்க
உதவுவதே கீதைநெறி! மனப்ப ழந்தான்
ஏற்றிருக்கும் ஓடுவிடும் பழுத்தால்! ஞான
ஏகாந்த பல்லக்கில் பயணம் கிட்டும்!

சோற்றுக்கும் புதுத்துணிக்கும் ஆசை கொண்டு
சொல்லாமல் இந்துமதம் விட்டுச் சென்ருேர்!
ஆற்றல்மிகும் எதிரிகளின் வாளுக் கஞ்சி
அயல்மதத்துத் தாடிவைத்தோர்! இல்லையென்று
தூற்றுகின்ற பகல்விண்மீன் தேடு வோர்கள்
தொகைகெல்லாம் பதில்தந்து இந்து தர்மம்
காற்றிருக்கும் இடமெல்லாம் இருக்கும் வண்ணம்
கடமைசெய வாழ்த்துகிருேம் நீடு வாழ்க!

உடைஓடும் செம்பொன்னும் ஒன்றே என்ற
ஓங்குமன செவ்வானத் துறவி ஞானப்
படைவீரக் கலங்கரையாம் விவேகா நந்தர்
பாறையுளக் காலம்வரை! புதிதாய் மஞ்சள்
உடைவீரர் சனுதரரின் தொண்டு நிற்கும்!
ஊரெல்லாம் கீதைஉரை நிகழும்! ஞான
அடையாளச் சீட்டுதரும் என்று கூறி
ஆரமுதக் கவியோகி வாழ்த்து கின்றேன்.

உ

முருகா.

சிவகாசி,
13—12—80.

வாழ்த்து.

நேரிசை வெண்பா.

மன்னுபுகழ் ஸாதனு மாத இதழ்வாழி
பன்னு ஸனுதனு பார்புகழ — நன்னலமாய்
வேலன் திருவருளால் மென்மேலும் ஓங்கியே
சாலவும் வாழ்க தழைத்து,

அன்புள்ள,
கிருபானந்தவாரி.

RIVATE SECRETARY
o His Holiness Sri Jagadguru
hankaracharya, Dakshinamnaya
RI SARADA PEETHAM
RINGERI-577 139 (Karnataka)

Date: 15—12—80

ஸ்ரீ ஸநாதனு அவர்களுக்கு,

உங்கள் கடிதம் ஸ்ரீ.ஸ்ரீ. மஹாஸன்னிதானமவர்கள் பாத மலங்களில் உங்கள் நமஸ்காரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டது,

நீங்கள் நடத்த இருக்கும் **ஸாதனு** என்ற பத்திரிகை ர் விக்னமாக, சிறப்பாக வெளிவந்து அதைப் படிப்பவர்க ால்லாம் பகவானருளால் நல்ல கதியை அடையவேண்டுமென னுக்கிரஹித்தளித்த பிரசாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறோம்.

இப்படிக்கு,
Sri Jagadguru Shankaracharya.

யுகத்தின் சிறப்பு

டாக்டர். க. குழந்தைவேல்

எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவி வாய்த்தல் மிக அருமை. கிடைத்தற்கரிய இம் மனிதப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும் இதனை மிக நல்ல காரியத்துக்காகப் பயன்படுத்த வேண்டும் **"நாமே எல்லாம், நமக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை"** என்னும் எண்ணத்துடன் புலன் இன்பங்களில் திளைக்க ஆரம்பித்தால் இப் பிறவியின் உண்மையான பயனைப் பெறமுடியாது. புலன்கள் இன்பங்களை நுகரும் சக்தியை இழந்ததும், அல்லது அவற்றில் சலிப்பு ஏற்பட்டதும் ஒரு சூன்யம் நம்மைக் கௌவிக்கொள்ளும், வாழ்க்கை பொருளற்றதாகத் தெரிய ஆரம்பிக்கும். இப்பிறவி எவ்வித பயனுமின்றி வீணாகக் கழிந்துவிடும். சலிப்பின் காரணமாக, சோர்வின் காரணமாக ஏற்படும் பல தற்கொலைகளுக்கு இதுதான் காரணம்.

இதற்கு மாறாக, **"நமக்கு மேற்பட்ட, நம்மையும் இவ்வுலகையும் இயக்குகிற சக்தி ஒன்று உண்டு. அதன் விதிப்படி நாம் இயங்குகிறோம்"** என்னும் எண்ணம் நம் மனத்தில் இருந்தால் நமக்குத் தானாகவே ஒரு பணிவு ஏற்படுகிறது. அகங்காரம், ஆணவம் போன்றவை ஏற்படுவதில்லை. நம்மை இயக்கும் இச்சக்திக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்வோம். மனதில் குழப்பமும் கொந்தளிப்பும் இன்றி தெளிவும் அமைதியும் இன்பமும் ஏற்படும்.

நம் வாழ்க்கை நன்கு நடைபெறுகிறதென்றால் அதற்கு நாம் மட்டும் பொறுப்பானவர்களல்ல. நம் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கின்ற பலர், பலசக்திகள் அதற்குப் பொறுப்பாக உள்ளன. நம் தாய் தந்தையர் நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கி நமக்காக உழைத்துச் சேமித்து நம்மை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்துள்ளனர். அவர்களது முன்னோர்களும் தமது உழைப்பின் மூலம் விட்டுச் சென்ற செல்வத்தின் மூலம் குடும்ப பாரம்பரியத்தின் மூலம் நமதுஇன்றைய வாழ்க்கைக்குப் பொறுப்பாக உள்ளனர். நமது உற்றார்உறவினர் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் பல வழிகளில் நம் வாழ்க்கைக்கு உதவி இருக்கிறார்கள். நம்மைச் சுற்றிலும் உள்ள அவர்கள் தீயவர்களாக இருந்து தீயவையே செய்து வந்திருப்பின் அவை நம்மை வெகுவாகப் பாதித்திருக்கும். அவர்கள் நல்லவர்களாக இருந்து நல்லவையே செய்து வந்திருப்பின் அவை நம்மையும் நல்லவர்களாக்கியிருக்கும். ஆகவே நம் உற்றார் உறவினருக்கும் நம் நல் வாழ்க்கையில் ஒரு பங்கு உண்டு. நமது உறவினர்களல்லாமல் நம்மைச் சுற்றியுள்ள மற்ற மக்களும் தங்களது எண்ணங்கள், செயல்கள் மூலம் நம்மைப் பாதிக்கிறார்கள் நமக்குக் கருவியாக உள்ள இவ்வுடல், அதை இயக்கும் மனம் நம் நல்வாழ்க்கைக்குப் பெரும் பொறுப்பு ஏற்கிறது. எல்லாவற்றிற்கும்மேலாக நமதுபுலன்களுக்குத் தெரியாத, தெரிய முடியாத தெய்வீகசக்தி நம்மை இயக்குவிக்கிறது நம் நலவாழ்க்கையின் பெரும்பொறுப்பு இத்தெய்வீக சக்தியையே சார்ந்தது. ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே, அடங்குவித்தால் யாரொருவர் அடங்காதாரே'' என்னும் ஆன்றோர் வாக்கு உண்மை நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய பல சக்திகளின் கூட்டு இயக்கத்தினால் நம் வாழ்வு இவ்வுலகில் நன்கு அமைகின்றது. இந்தச்சக்திகளை நாம் உணர வேண்டும்; எண்ணிப் பார்க்க வேண்டும்; அவற்றிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை முறைப்படி செய்ய வேண்டும். இதனையே வள்ளுவர்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

எனக்கூறினார். இதனையே இன்னொருசாரார் நாம் செய்யவேண்டிய யக்ஞ கர்மங்கள் என்று கூறியிருக்கிறார்கள். பிரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பிதுர் யக்ஞம், மனுஷ யக்ஞம், பூத யக்ஞம் என்னும் ஐந்துவகையான யக்ஞ கர்மங்களை ஒவ்வொரு மனிதனும் முறையாகச்செய்து வரவேண்டுமெனவும்அவ்வாறு முறையாகச் செய்பவனே தனது கடமைகளை ஒழுங்காகச் செய்பவனாகக் கருதப்படுவான் எனவும் கூறியுள்ளார்கள்.

ஸாதனா

யக்ஞம் என்பதுஎன்ன? பொதுவாக மக்கள் யக்ஞம் அல்லது யாகம் அல்லது வேள்வி என்னும்போது தீவளர்த்து அதில் சமித்துக்கள், நெய் போன்றவற்றை மந்திரங்களை ஓதிக் கொண்டு இடுவதையே நினைவில் கொள்ளுவார்கள். இவை யக்ஞத்தினுடைய வெளிச் சின்னங்கள், சடங்குகள். ஆனால் இவையே யக்ஞம் ஆகிவிடாது. உண்மையான யக்ஞம் இதனினும் உயர்ந்தது, ஆழமானது. தனிநலம் கருதாத புண்ணியச் செயல், தியாகபுத்தியோடுசெய்யும் சேவை, உலகத்தின் நன்மைக் கென்று செய்யப் படும் செயல், ஈசுவர ஆராதனையாக ஆற்றும் வினை, பாரமார்த்திகப் பெருநோக்கோடு செய்யப் படும் கர்மம் ஆகிய இவை யாவும் யக்ஞம் ஆகும். இச்செயல்கள் சுயநலத்துக்காகச்செய்யப் படுபவை அல்ல. இச்செயல்களை யார் பக்தி சிரத்தையுடன் செய்கிறார்களோ அவர்களே யக்ஞம் செய்பவர்களாவார்கள். அவர்களே பற்றற்றுக் கர்மம் செய்பவர்கள். செய்யும் கருமத்தால் கட்டுப்படாத ஞானிகள். கீதையின் இரண்டாம் அத்தியாயத்தின் இறுதியில்வர்ணிக்கப்படும் ஸ்திதப்ரக்ஞன் நிலைக்குத் தகுதிவாய்ந்தவர்கள்

நாம் செய்யும் எல்லாக் காரியங்களையும் யக்ஞமாகக் கருதிச் செய்யவேண்டும். யக்ஞ பாவனையுடன் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அக்காரியத்தால் ஏற்படும் நன்மை தீமைகளால், பாபபுண்ணியங்களால் நாம் கட்டுப்படுவதில்லை.

''யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர்கள் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகின்றனர். ஆனால் தங்கள் பொருட்டே சமைக்கும் பாபிகள் பாபத்தைஉண்கின்றனர்'' ''யக்ஞ கர்மம்தவிர மற்ற கர்மத்தால் இவ்வுலகம் கட்டுண்கிறதுகுந்தியின்மைந்தா யக்ஞகர்மத்தைப்பற்றற்று நன்கியற்று'' ''சிருஷ்டி துவக்கத்தில் பிரம்மதேவன் யக்ஞத்துடன் பிரஜைகளைப் படைத்து 'இதனால் விருத்தியடையுங்கள்; இது உங்களுக்குக் காமதேனு வாகட்டும்' என்றார். ''இதனால் தேவர்களைப் பேணுங்கள், தேவர்கள் உங்களைப் பேணட்டும். பரஸ்பரம் பேணிப் பெருநன்மைஎய்துவீர்கள்'' என்னும் கீதைகருத்துகள் நாம் என்றும் கவனத்தில் கொண்டு கடைபிடிக்க வேண்டியவை. இன்ப துன்பங்களால் அலைக்கப்படாமல் அமைதியாக இன்பமாக உலகில்வாழ யக்ஞ பாவனையுடன் செயல்களைச் செய்வதைவிடச் சிறந்த மார்க்கம் இல்லை.

காந்தியடிகள் ஒவ்வொரு நாளும் அரைமணி நேரம் ராட்டையில் நூற்றார். அதை அவர் ஒரு சாதாரண செயலாக எண்ணவில்லை. நூற்பு யக்ஞம் என்றார். யக்ஞ பாவனை யுடன் செய்தார். இந் நாட்டிலுள்ள கோடானுகோடி ஏழை

ளியவர்களது வாழ்வு வளமா
த் தான்செய்யும் ஒரு யக்ஞ
ாக அதைக் கருதி நூற்றுர்.
வலை யில்லாத மக்களுக்கு ஒரு
வலைக்கு வழிகாட்டுகிற முறை
லும், உழைப்பவர்களுடன்
ாம் உழைப்பவர்களாகஉணர்
பூர்வமாக ஒன்று படுத்திக்
காள்ளும் முறையிலும் இந்த
ற்பு யக்ஞம் பயன்பட்டது.
லகநன்மை கருதிசெய்ததால்
சய்தவர்களுக்கு மன ஆன்மத்
ாய்மை இதன் மூலம் ஏற்பட்
டது.

இக்காலத்தில் கீதா யக்ஞம்
ல இடங்களில் நடைபெறு
ன்றன. அருட்செல்வர் ஸநா
ஞ அவர்கள் 108 கீதா யக்
நம் செய்வதை ஒரு விரதமாக
ற்று இதுவரை 77 யக்ஞங்க
ாச் சிறப்பாக ஆற்றியுள்ளார்
ள். இவற்றின் மூலம் ஆயிரக்
ணக்கான மக்கள் மனதில்
தையின் உயர்ந்த கருத்துக்
ளை ஊன்றி வருகிருர்.

''நான் கீதையைப்படித்திரு
கிறேன், அதைப்பற்றிச் சிந்தி
துதெளிவுபெற்றிருக்கிறேன்.
தை படிக்காத பாமரமக்
ளுக்கு நான் கூறி அவர்களைத்
ருத்தப்போகிறேன்''

என்னும் எண்ணத்துடன்
ருவர் கீதையைப்பற்றிப்பேசி
ல் அது அவரது திறமையை
வளிக் காட்டும் செயலாக
மைந்துவிடும். இறுதில்''என
குமேல் யார் இத் துறையில்''
ன்னும் எண்ணமாக முற்றி

அகங்காரத்திலும் ஆணவத்தி
லும் சென்றுமுடியும். இதுகீதை
யின் போதனைக்கு நேர் மாறு
னது. ஆனுல் அருட்செல்வர்
ஸநாதனு அவர்கள் கீதையைப்
பற்றித் தான் கற்றதை, தெளி
ந்ததை மற்றவர்களுக்கு எடுத்
துச்சொல்வதை ஒருயக்ஞமாக
கருதுகிருர். யக்ஞ பாவனையு
டன் செய்கிருர். வேள்வித் தீ
யில் நெய் விடுவதைப் போல
உரை மழையாக மக்களிடை
கொட்டுகிருர். ஆண்டவன்
அளித்த இந்த அறிவு ஞானம்
மக்கள் உருவில் கூடியிருக்கும்
ஆண்டவனுக்கும் அர்ப்பணமா
கட்டும் என்னும் பாவனையுடன்
கீதா யக்ஞம் நடத்துகிருர்.

இத்தகைய கீதா யக்ஞங்கள்
அறிவு யக்ஞங்கள், கருத்து யக்
ஞங்கள் நாட்டில் மேன்மேலும்
வளரவேண்டும். எங்கெல்லாம்
கருத்துப் பரிமாற்றங்கள் நடை
பெறுகின்றனவோ அவைபள்ளி
கள், கல்லூரிகள், ஆலயங்கள்
பொது மன்றங்கள் போன்ற
எவையாகுலும்சரி, அங்கெல்
லாம் யக்ஞ பாவனையில் இச்
செயல் நடைபெற வேண்டும்.
அதன்மூலம்கூறுபவர்களும்நன்
மையடைகிருர்கள். கேட்பவர்
களும் நன்மை பெறுகிருர்கள்.
இவற்றின்மூலம் நம் ஆன்மீக
நூல்களிலுள்ள உயர்ந்த கருத்
துக்கள் பட்டணங்களில் மட்டு
மன்றி பட்டிதொட்டிகளிலும்,
பண்டிதர்களிடையில் மட்டு
மன்றி பாமரர்களிடையிலும்
பரவவேண்டும். வேதாந்தக்க
ருத்துக்களை வீட்டுக்கு வீடு

[19-ம் பக்கம் வருக]

ஸாதனு

சுமிழருக்குமங்களமான இந்த பொங்கல் நன்னாளிலே குற்றாலத்து குறத்திஉங்களை வாழ்த்துகிருள்.உங்கள் சிங்கரேகைக்கையைப் பார்த்து அவள் வாழ்த்துகிருள்.

மாருமலி நநிலந்தி
லறம் வளர்க்குங் கையே
மனையறத்தால்அறம்பெருக்கித்
திறம் வளர்க்குங் கையே

இல்லறத்தை ஓம்பி அறம் வளர்க்கிறது உங்கள்கை.அதனு லேயே உங்கள் கையின் திறம் வளர்கிறது அது மாத்திரமா

வீருக நவநிதியம்
விளையுமிந்தக்கையே.
மேன்மேலும் பாலமுதம்
அளையுமிந்தக் கையே.



இன்று காலை பொங்கற் பானையிலே பாலமுதம் அளைந்த கையல்லவா உங்கள் கை நீங்காத பசியை யெல்லாம் நீக்கப்போகிறது உங்கள் கை

ஆருத சனங்கள் பசி
யாற்று மிந்தக் கையே
அனேங்சனையார் வணங்கி
நித்தம்
போற்றுமிந்தக் கையே

இவ்வாறு ஏழை மக்களுடைய ஆருத பசியையெல்லாம் ஆற்றப் போகிற உங்கள் கையைத் தான் எங்கள் குற்றுலநாதர் ஏற்றுக் கொள்வார் என்று வாழ்த்துகிருள் குறவஞ்சி

பேருக நன்னகரம்
காக்கு மிந்தக் கையே.
பிறவாத நெறியார்க்கே
யேற்குமிந்தக் கையே.

இப்படி யெல்லாம் நம்மை யாழ்த்துகிறவள் குற்றுலக் குறவஞ்சி. குறவஞ்சியென்றுல் குறப்பெண் என்று பொருள் பொதுவாக எல்லா இலக்கியங் களிலும் சமுதாயத்தில் உயர் மட்டத்திலுள்ள மக்களேயே காவியத் தலைவர் களாகக் கொண்டு காவியத்தை அல்லது நாடகத்தை இயற்றுவார்கள். சக்கரவர்த்தி திருமகன் ராமா யணத்தில் காவியத் தலைவன். மகா பாரதத்தை யெடுத்துக் கொண்டால், காவியத்தலைவர் கள் அரசர்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை, ஜீவகசிந்தாமணி முதலிய பெருங் காப்பியங்களி லும் காவியத்தலைவர்கள் சாம னிய மாந்தரல்ல. ஆனுல் குற் றுலக் குறவஞ்சியென்ற காவிய நாடகத்திலே மையமாக இரு ந்து கதையை நிகழ்த்துகிற தலை மையான பாத்திரம் யாரென் றல், ஒரு சாமானியக்குறத்தி இவ்வாறு சமுதாயத்தில் கீழ் மட்டத்திலிருக்கும் ஒரு குறத்தி யைக் காவியத் தலைவி ஆக் கிய பெருமை குறவஞ்சி ஆசிரியருக்கே உரியது.

ஆசிரியரின் பெயர் திருகூட ராஜப்பக் கவிராயர். அவர் 17 வது நூற்றுண்டின் இறுதியிலே பிறந்தவர் அவர் வாழ்ந்த இடம் மேலகரம் என்ற சிறு கிராமம் சுமார் 50 வீடுகள் உள்ள குக்கிராமம். தென் காசி க்கும் திருக் குற்றுலத்துக்கும் இடையில் இருக்கிறது, மேலக ரம. இந்தப் பட்டிக்காட்டிலே வாழ்ந்த ஆசிரியர், ஆங்கிலப் படிப்பே இல்லாதவர் தற் கால விஞ்ஞானியைப் போல தெளிந்த பார்வையோடு எதை யும் பார்க்கும் வல்லமை பெற் றிருந்தார். அதோடு அவர் உண ர்ந்த உண்மைகளைத் தேனுகத் தித்திக்கும் தமிழிலே ஊறப் போட்டு அவற்றை நமக்கு உல் லாசமான கவிதை வடிவத்தில் அவர் பரிமாறும்போது நமக்கு மட்டற்ற இன்ப மயக்கமே ஏற்படுகிறது.

குறத்தியைப் பார்த்தாலும் சரி. அல்லது பேரண்டத்தைப் பார்த்தாலும் சரி, அவருடைய காட்சியே அலாதி. அதை எடுத் துச் செல்வதற்கு தமிழ் காத் துக் கொண்டிருக்கும். தமி ழென்றுல், செத்த தமிழல்ல, உயிருள்ள தமிழ், பழகு தமிழ். நம்மோடு கொஞ்சிக குலாவும தமிழ். குற்றுல மலையின் வள த்தைக் குறத்தியாக இருந்து பாடுகிறுர் கவிஞர்.

வானரங்கள் கனிகொடுத்து
மந்தியோடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்

ஆண் குரங்கு பெண் குரங் குக்கு கனிகளைக் கொடுத்து கொஞ்சிக்கொண்டிருக்கும். எப் பேர்ப்பட்ட கனிகள் அவை! நன்றுகக் கனிந்து தேன் பிலிற் றிக் கொண்டிருக்கும் கனிகள். சிலவற்றைத் தின்று விட்டு சில வற்றை அலட்சியமாகச் சிந்தி விடுமாம் உச்சாணிக் கொம் பிலே யிருக்கிற பெண் குரங்கு

இப்படி சிந்துகிற கனிகளின் இன்சுவையை யறிந்தவர்கள். வான நாட்டிலே யிருக்கும் கவிஞர்கள். அப்படி சிந்தி விழுகிற கனிகளுக்குப் போட்டி போடுவார்களாம் அவர்கள்.

வானரங்கள் கனிகொடுத்து
மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்.

செண்பகாடவி — அதற்கு மேலே தேனருவி—நீண்டுயர்ந்த மலை—அண்ணுந்து பார்த்தால் வானலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்து விழுகிறதோ என்று தோன்றும் தேனருவி

தேனருவித் திரையெழும்பி
வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்,

குற்றாலத்தருவியிலே குளித்து குளித்து அனுபவித்தவர்கவிஞர் அந்த அருவி பொங்குமாங் கடலிலே குதிக்கும், பிறகு, அதிலிருந்து பொங்கித் ததும்பி மறுபடியும் கீழ்நோக்கிப் பாயும் ஆர்வத்தோடுவிழும் அந்த அருவியிலே நாம் தலையைக் காட்டினுல் போதும். அப்படியே நம்மை அது குளிப்பாட்டிவிடும் அதன் பம்பல்,பாய்ச்சல், துள்ளல்களையெல்லாம் கூர்ந்து கவனித்தால், அருவிக்கு நம்மைப், போல, உடம்பும், உள்ளமும், உயிருமே இருப்பதாக தோன்றும். குறவஞ்சி ஆசிரியருக்கு அப்படித் தான் தோன்றியிருக்கிறது.

அருவிக்கரையிலிருந்து அரை மைல் தூரம் வரை அருவியின் முழக்கம் கேட்கும். பலமாக விழும் அருவிக்கு ஆண் அருவி என்றுபெயர்;சொகுசாகவிழும் அருவிக்கு பெண் அருவி என்று பெயர், சிலசமயங்களில் முத்து போன்ற சிறிய கூழாங்கற்கள் அருவித் தண்ணீரோடு வந்து விழுந்து சிதறும். இதைப் பார்க்கும்போதுஅருவிப்பெண் கழற்சி விளையாடுவதுபோலிருக்கின்றது.

முழங்கு திரை புனலருவி
கழங்கென முத்தாடும்

அருவி விழும் இடம் மணற்பாங்கான இடம். அங்கே சிறுவர்கள் சிறிய மணல் வீடுகள் கட்டி விளையாடுவார்கள். அவர்களைக் கண்டவுடன் அருவிக்கும் பிள்ளைகளுக்கே உரியகுறும்புத்தனம் ஏற்பட்டுவிடும். திம்-திம் என்று பாய்ந்து அந்த சிற்றில்களை அழித்து விட்டு ஓடியேபோய்விடும்.


முற்றம் எங்கும் பரந்து
பெண்கள்
சிற்றிலைக் கொண்டோடும்

இவ்வாறு மனிதப் பண்புகளை அருவிக்கு ஏற்றி அதையனுபவிக்கிருள் குறவஞ்சி

மகாகவி Shakespeare
சொன்னர்.

The poet's eye, in a Fine Frenzy rolling doth glance from Heaven to Earth and Earth to Heaven

(தொடரும்)



ருவாளர். ஸ. சண்முகசுந்தரம் அவர்கள்

ஏறக்குமார் பதினைந்து ஆண்டுகளு த முன் மதுரை போயிருந்தேன் ன்னுடைய அருமை நண்பரும் பரறிஞருமாகிய ஜஸ்டிஸ்மகா ாஜன் அவர்கள் அப்பொழுது துரைமாவட்ட நீதி பதியாக ருந்தார்கள். அவர்களுடைய ருந்தினனுகவே நான் போயி ந்தேன்.

நீதிபதி மகாராஜன் அவர்கள் ங்கெங்குஇருந்தாலும்சரி.வரு த்திற்கு மூன்று தடவை நா கு தடவைஅவர்களைத் தேடி ்போவேன். அவர்களுடன்ஒரு ாரமோ இரண்டு வாரமோ ுன் இருப்பேன். தெளிந்த மய்யுணர்வும் எல்லையில்லாத ன்பும்நிறைந்தவர்கள்நீதிபதி காராஜன், அவர்களுடைய அனுபவங்களை அவர்களுடைய பொன்னுரைகளில் கேட்கக் கேட்க எனக்கு ஆனந்தமாக இருக்கும். அத்தகையவாய்ப்புக் கிடைக்காவிட்டால்,ஈடுசெய்ய முடியாத ஒரு மனக்குறை எப் பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்.

நீதிபதியின் விருந்தினனுக இருந்த நான், கலை, பண்பாடு கவி முதலிய துறைகள் பற்றி ஒவ்வொரு நாளும் அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டே இருந்தேன். ஒரு நாள்மாலை ஆறு மணி இருக்கும் "மீனுட்சி அம்மன் கோவிலுக் குப் போய்விட்டு வருகிறேன்" என்று அவர்களிடம் சொல்லி விட்டுப் போனேன்.

சாதனு

கோவிலில் அன்று ஒரு கூட்டம். ஒவ்வொரு மண்டபமும் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. எந்த இடத்திற்குப் போனாலும் ஒரே திருவிழாக் கூட்டமாக இருந்தது கோவில்.

கொடிமரம் வரை உள்ளே வருவதற்கே போதும் போதும் என்றாகிவிட்டது கரு வறைப் பக்கம்நெருங்கவே முடியவில்லை ஏதோ ஒரு மணி நேரம் கோவிலுக்குள் அப்படியும் இப்படியும் சுற்றிவிட்டுஎட்டி நின்று அன்னை மீனாட்சியை நினைந்து வணங்கி விட்டு நீதிபதியவர்களின்மாளிகைக்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது இரவு மணி எட்டு.

என்னுடையசோர்வையும்கலக்கத்தையும் அமைதியின்மையும் நீதிபதிகண்டு கொண்டார்கள். பதறிவிட்டார்கள் ஏன்'' இப்படி இருக்கிறீர்கள் என்னநடந்தது? என்று துருவித்துருவித் தாய் போலவிசாரித்தார்கள்

'' எவ்வளவு பிரயாசைப் பட்டும், மீனாட்சியம்மையைத் தரிசனம் செய்யமுடிய வில்லை. கோவிலுள்சுற்றிச்சுற்றிவந்தது தான் மிச்சம். நிம்மதியாகப் பிரகாரங்களைக் கூடச்சுற்றமுடியவில்லை. கூட்டமும் நெரிசலும் அப்படி'

''கோவிலுக்குபோயும்தரிசனம் பண்ணமுடியாது திரும்பியது மனசுக்கு என்னவோ போல இருக்கிறது. எதையோ பறி கொடுத்து விட்டதைப் போல் இருக்கிறது'' என்றேன்.

நீதிபதி சிறிது நேரம் யோசித்தார்கள். வீட்டினுள் சென்றார்கள். கால் மணி நேரத்தில் பட்டாடை உடுத்தி பட்டுஅங்கவஸ்திரத்தைமாத்திரம் போர்த்திக் கொண்டு வந்து விட்டார்கள். காரில் ஏறி உட்காரும்படி என்னைப் பணித்தார்கள். தாமே காரை ஓட்டினார்கள். மீனாட்சி அம்மன் சன்னதி முன்பு கார் வந்து நின்றது.

கோவிலுள் கூட்டம் அவ்வளவாக இல்லை. இருக்கிற சிறிய கூட்டமும் கொஞ்சங் கொஞ்சமாக வெளியேறிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு பிரகாரத்தையும் முறைப்படிசுற்றிவந்தோம் கருவறையின் பகுதிக்கு உள்ளேயேசென்றோம் கண்குளிர மீனாட்சியம்மையின் திவ்ய தரிசனத்தை அனுபவித்தோம், பட்டர்கள் பய பக்தியோடு அன்னையின் பாதத்திலிருந்து சிரசுவரை ஒவ்வொரு அருள்க்கோலத்தையும் தீபாராதனை செய்து காட்டினார்கள்.

பார்க்கப் பார்க்க உள்ளம் உருகிவிட்டது. பக்தி மயமாய் கரைந்து விட்டது. கவலையும் சோர்வும் பறந்தோடிவிட்டன. தெம்பும் ஊக்கமும்பிறந்து விட்டன, எப்பேர்ப்பட்டஆனந்தம்! எப்பேர்ப்பட்ட நிறைவு அது விவரித்துச் சொல்லவே முடியாது. அப்படி நினைக்க நினைக்க இன்ப ஊற்றாய் மனசைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தது அன்னை மீனாட்சியின் தரிசனம்.

அன்னையின் தரிசனம்என்னை எண்ணஎப்படிஇன்பஊற்ருய்ப் பெருக் கெடுத்ததோ, அப்படி இன்னமும் இன்ப ஊற்ருய்ப் பெருக்கெடுத்துக் கொண்டிருக் கிறது நீதிபதியவர்கள் என்னி டம் காட்டிய அன்பும், பரிவும்.

தரிசனம் பெருமையால் என க்கு ஏற்பட்ட வேதனையைப் பார்த்து அவர்கள் துடித்து விட் டார்கள்அவர்கள் அப்பொழுது தயங்கியதையும் மயங்கியதை யும் மறக்கவே முடிய வில்லை. தரிசனங்கண்டு என்கண்ணும் மனமும் குளிரவேண்டும் என்ப தற்காக அவர்கள் என்னை மறு படி கோவிலுக்கு அழைத்த ஆர் வத்தையும்வேகத்தையும் அவர் களுடைய எளிமையையும் நினை க்க நினைக்க இன்பமாக இருக் கிறது.

மீனாட் சியம்மையின் தரி சனம் அப்படியே மனசைவிட்டு நீங்காமல் நிற்கிறது, அதுபோல நீதிபதியவர்களின் அன்பும்எளி மையும் மனசை விட்டு நீங்கா மல் நிற்கிறது.

(தொடரும்)

யாத்திரையின் சிறப்பு *(12-ம் பக்க தொடர்ச்சி)*

ஏழை எளியவர்களிடையில் எடு த்துச்சொல்ல ஆளில்லையே என்ற சுவாமி விவேகாநந்தரின் மனக் குறை அகல வேண்டும். இந்த வழியில் செல்லும் **அருட்செல்வர் ஸாதனா** அவர்களின் முயற்சி மேன் மேலும் பெருக வேண்டும். ஆண்டவன் அவருக்கு உடல், மன, ஆன்மநலனை நல்கி இப்பணியில் தொடர்ந்து முன் னேற வேண்டிய தெளிவான சிந்தனையை திடமான உள்ளத்தை இடையருது அளிக்க வேண்டுகிறேன். (முற்றும்)



ஸாதனா சந்தா விபரம்

காப்பாளர் ரூ. 500. ஆயுள் சந்தா ரூ. 250

10 ஆண்டு சந்தா ரூ. 125 5 ஆண்டு சந்தா ரூ. 70

ஆண்டு சந்தா ரூ. 15

என் வேண்டும் மெய்ஞ்ஞானம்?

சேக்கிழார் அடிப்பொடி
டி. என். இராமச்சந்திரன்.

நாம் விஞ்ஞான உலகில் வாழ்கின்றோம். சந்திர, செவ்வாய் மண்டலங்களின் இயல் கண்டு தெளிய விஞ்ஞானிகள் அரும்பாடுபடுகிறார்கள். அமானுஷ்யமான பலசெயல்களை விஞ்ஞானிகள் எளிதில் புரிந்து வருகின்றனர், சித்திகளும், தபசும் சாதிக்கத்தக்கன அல்ல என்று இருப்பனவாகக் கருதக்கூடிய வற்றை, விஞ்ஞானம் வெகு சுலபமாகச் சாதித்துக் காட்டுகின்றது. விஞ்ஞானத்தின் அன்றன்றைய சாதனைகளைக் கண்ணுறுவோர் பிரமிப்பில்அமிழ்ந்துபோய், இதைவிடச்சிறந்த ஞானம் இல்லை என்றுஅடித்துப் பேசுகின்றனர்.

இன்றைக்குஅடைந்திருக்கும் வளர்ச்சியை விஞ்ஞானம் பெறாத காலத்திலேயே விஞ்ஞானத்தின் பெருமையை பரக்கப்பாட ஸ்துதி பாடகர் பலர் தோன்றி இருந்தனர் குறிப்பாக கார்ல் பியர்சன் (Karl Pearson) என்பார், ''விஞ்ஞானத் துடைப்பம் சாடமுடியாதஇடுக்குகளில் மட்டுமே மதங்கள் தங்கள் ஒட்டடை வலையைப் பின்னிக் கொண்டிருக்கின்றன'' என்றார்.

மதங்களையோ, அல்லது அவையிற்றால்பெறப்படும்மெய்ஞ்ஞானத்தையோ, பழிப்பதும், தெழிப்பதும் என்பது புதிதாக மண்கீறி முளைத்த நவயுகக் காளான் அன்று. ''உலோகாயதன்என்னும்ஒண் திறல்பாம்பின் கலாபேதத் தகடுவிடம் எய்தி'' என்ற மணிவாசகம் சிந்திக்கத் தக்கது.

''இப்படி யன்றிக் கண்மம்
உயிர் இறை வேறு உண்டுஎன்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர்

செய்திடும் குற்ற மென்னே
ஒப்பிலா மலடி பெற்ற
மகன் ஒரு முயல் கொம்புஏறி
தப்பு இல் ஆகாப் பூவைப்
பறித்தமைசாற்றினரே'' என்று

ஒரு செய்யுள் சிவஞான சித்தியார் பரபக்கத்துள் வருகின்றது. இதன்பொருள் :— ''இப்படி பூதக் கூட்டத்தினுல் உருக்கள் தோன்றி வாயுக் கெடக் கெடுதல் அன்றி, முன் செய்த கர்மம் பின் தொடரும் என்றும், இதனைப் புசிக்கத் தக்கது ஓர் ஆன்மா உண்டுஎன்றும் இவையிற்றைக்கூட்டுவான் ஒரு கர்த்தாஉண்டு என்றும், சமயிகள் உலகத்தாரை மயக்க, உலகத்தார் சமயிகளுக்குச் செய்த குற்றம் யாது? உலகத்தாரை மயக்கச் சமயிகள் கூறுவது, (மலடி பெற்ற ஒப்பிலாத மகன் ஒரு முயலின் கொம்பிலே ஏறி ஆகாயத்தில் பூத்தபூவை தவறு இன்றிப்பறித்தான) என்னும் தன்மைக்கு ஒக்கும்என்றவாறு,

'' கல்லா உணர்வின் மிசையோடு உலகாயதனைப் புணர்வதொரு புல்லறிவுபூண்டு'' தாம் பட்ட இடர்களை எல்லாம் உமாபதி தேவ நாயனர் 'நெஞ்சுவிடுதூ' தில் வருணிக்கிருர்.

''நாத்திகத்தின் தொன்மை கண்டு நலிவுறல் நன்றன்று'' என்று டாக்டர் ஜான்சன் பாஸ்வலுக்கு கூறவேண்டியிருந்தது.

விஞ்ஞான வாதிகளைப்பற்றிய விமர்சனத்தைத் தொடர்வோம். உலா மகாயுத்தங்களுக்குப் பிறகு, விஞ்ஞானம் நமக்குத் தந்தது முன்னேற்றமா? அல்லது அழிவா? என்பதை ஆராயவேண்டும். விஞ்ஞானத்தின் சாதனைகளால் மனிதன் தூய்மை பெற்றிருக்கிருன் என்று வரலாறு இல்லை. ஒழுக்கம் விஞ்ஞானத்தால் தாபிக்கப்பட்டதாகவோ, அல்லது பேணப்பட்டதாகவோ கொள்வதற்கு சற்றும் இடமில்லை. ஒழுக்கத்திற்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம் அளிக்காத அறிவை ஞானம் என்று பேசலாமா? நன்மையுடன் சிவணிய ஆற்றலைத்தான் ஆற்றல் என்று கொள்ளலாம், அசுர சக்தியைப் புகழ்வதினுல், பேணுவதால் வரக்கூடிய பயன் என்ன? பண்டைய காலத்தில் கடுந்தவம் இயற்றி ஆற்றலைப் பெருக்கிக்கொண்ட அசுரர்களுக்கும் இன்றைய நேர்மையற்ற விஞ்ஞானிகளுக்கும் இடையே வாசி என்ன காண முடியும்?

நுணுகி ஆராய்ந்தால், ''எப்படி?'' என்ற கேள்வியை எழுப்புவது விஞ்ஞானமாகவும் ''ஏன்?'' என்ற கேள்வியை எழுப்புவது மெய்ஞ்ஞானமாகவும் இருக்கின்றது அநுபவத்திற்குத் தட்டுப்படாத ஒன்றை, அதாவது தற்மயம் உண்மை என்று நிரூபணம் ஆகாததாய், ஊகம் என்று கொள்ளவேண்டிய ஒன்றை

ஆராயப் புகுகின்றவிஞ்ஞானம் 'எப்படி'என்று கேட்டு, விடை காண முயலும். தத்துவ ஆராய்ச்சி (Philosophy) ''ஏன்?'' என்று கேட்டு, விடை தேட முயலும்.

'' The Scientist may be wise in limiting himself to an understanding of the 'how' but he cannot afford to ignore for ever or minimise the importance of '' why ''

என்று பேராசிரியர் சூரியநாராயண சாஸ்திரியார் கூறுகிறுர், 'எப்படி' என்ற அளவிற்கு மட்டுமே தன் அறிவை விஞ்ஞானி மட்டுப்படுத்திக் கொள்வதால்' சாதுர்யவனுக இருக்கலாம்; ஆனுல் 'ஏன்' என்பதன் முக்கியத்துவத்தை குறைக்கவோ, என்றென்றைக்கும் புறக்கணிக்கவோ அவ்விஞ்ஞானியால் கூடாதது ஆகும்.

சாஸ்திரியார் தரும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம் எச்சதச்சன் என்பான் தன் மனைவியை நையப் புடைக்கின்றுன், இந்தப் பிரச்சனையை விஞ்ஞானி அணுகுகின்ற முறை எவ்வாறு இருக்கும்? அது வருமாறு; எச்சதச்சன் தன் மனைவியை அடிக்கக் காரணம் பலவாக இருக்கலாம்,

(1) அவன் உணர்ச்சி அவனுக்குக் கட்டுப்படவில்லை.

(2) அவன்குடித்திருக்கலாம் குடிப்பதற்குக் காரணம் அது அவனுக்கு சல்லிசாகக் கிடைத்திருக்கலாம், இத்யாதி, இத்யாதி

புடைத்தல் எப்படி நிகழ்ந்தது என்பதை விட்டு, ஏன்நிகழ்ந்தது என்று பார்த்தால் விடை வேறு விதமாக அமையக் காணலாம். அடிப்பதற்குக் காரணம் எச்சதச்சன்பால் கோபம் மண்டிக் கிடக்கின்றது. கோபம் மேலோங்கக்காரணம், அவன் தன்னை வென்று ஆளும் திறம் படைத்திராததால். அத்திறனை அவன் பெறுதற்கு காரணம், அவனுக்கு அத்திறனைப் பற்றிய நல்லறிவு இல்லை.

விஞ்ஞான விளக்கம் எப்படியிருந்தது அல்லதுஇருக்கின்றது என்பதுபற்றி தத்துவ விளக்கம் எப்படி இருக்க முடியும் அல்லது வேண்டும் என்பதுபற்றி,

''மூலக் கருத்தின்
மானச் சிறையுள்
முடமாய்க் கிடந்தேனைக்
கோலச்
சுடரில் கோணமெல்லாம் ஏன்
கொண்டு திரிய விட்டாய் ?''

என்ற கேள்வி மெய்க்ஞானத் தாபத்தால் எழுப்பப்படுவது ஆகும், இதற்கு விடை விஞ்ஞானத்தில் கிடைக்காது

சுருங்கச் சொன்னுல் ஏங்கும் மனது இளைப்பாற இடம்

வகுத்துத் தர விஞ்ஞானத்தால் முடியாது. விஞ்ஞானம்சாதனை களைப்பெருக்கிஆவலைத்தூண்டி பற்றை படரச் செய்து ஜீவ யாத்திரையை முடிவற்ற தாகவே சேய்துவிடும் திறத்தது வாழ்க்கையின் ரஹஸ்யத்தைப் படி முறையால் (சோபானை முறையில்) விளக்கி வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறையை பயிற்றுவிப்பது மெய்ஞ்ஞானம் ஆகும்.

விஞ்ஞானம்விளக்கம்மட்டும் தரும். விளக்கத்தோடு அநுபவ த்தை (அநுபூதியை) அளிக்க வல்லது மெய்ஞ்ஞானம்.

விஞ்ஞானத்தால்அகில உலக ஆதிக்யத்தைக் கைக்கொள்ள விழையும் ரஷ்யாவைப் பற்றி நாம் அறிவோம் என்று லும் காந்திக்கே குருவாக விள ங்கிய டால்ஸ்டாய் ஜெனித்த பூமி ரஷ்யா.ஆகவே இன்றைய ரஷ்யக் கவிஞர்கள் தம்மை யும் மீறி மெய்ஞ்ஞானத் தேட்டத்திற்கு ஆக்கம் தரு கின்ற வகையில் பாடல்கள் அமைக்கின்றனர்.

காலம் என்பது படைக்கப் பட்டது; அழியும் தன்மையது என்றெல்லாம் நாம்அறிவோம் ''காலத்தோடு நிர்மூலம் படு மூ உலகும்'' என்பது பாரதி வாக்கு ''காலம்என்றே பெருங் கற்பனை'' என்பது திரிலோக தரிசனம் (கவிஞர் திரிலோக சீத்தாராம்அவர்களது வாக்கு) எப்படிப்பட்ட கால தத்துவத் தின் குணத்தின் ஒரு கீற்றை இன்றைய ரஷ்யக் கவிஞன் ரசூல் கம்சடோவ் விளக்கு வதைப்பாருங்கள்.


Time. do not bragl we're
not all shades
That glimmer in your light I
Many a man among us lives
Whose virtue makes you
bright
Our heroes, bands,
philosophers
Illuminates your way.
It is with their splendour
not your own.
You shine each hour and day

காலமே! சுயபுராணம்
பாடாதே.
நின் ஒளியுல் மின்னும்
நிழல்களோ நாங்கள் எல்லாம்
நாங்கள் பால் பலருண்டு
அவர் புரிந்த புண்ணியங்கள்
அழகொழி நினக்கு ம்கூட்டும்
எங்கள் நாயகர். புலவர்.
ஞானியர்
தங்கள் பாட்டை யினைத்
துவக்குவர்
அன்னாரின் ஒளி-நின்னது
அன்று-கூட
மன்னு நீ கணந்தோறும் நாள்
தோறும் ஒளிர்வாய்.

முடிவிலே ஒரு சொல், மெய் ஞ்ஞானிகள் காலத்தை வென் றிருப்பார்; மரிப்பார் வெறும் கர்மிகளே

ரௌத்திரி ஆண்டு, ஆவணி மாதம், பூர்வபட்ச சதுர்த்தி திதி தினமான விநாயக சதுர்த்தி யன்று விக்கினங்களெல்லாம் விலகவேண்டுமெனவேண்டிக்கொண்டு, மறுநாள் 14-9-80 ஞாயிறு, பிரம்மச்சாரிகள் ஸ்ரீ சகஜ சைதன்யா & ஸ்ரீஸ்பஷ்ட சைதன்யா ஆகியஇருஸ்வாமிஜி களின் தலைமையில் பத்து சிஷ்யர்கள் கோவையிலிருந்துஇமாலயப் பயணம மேற்கொண்டோம்.

கோவை என்.ஜி.ஜி.ஓ., காலனியிலுள்ள "சின்மயா ஞானாலயா" விலிருந்து நாங்கள் பன்னிருவரும் 'ஹரே ராமா ஹரே ராமா ராம ராமா ஹரே ஹரே; ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே' என்ற தாரக மந்திரத்தை அகண்ட கீர்த்தனமாக எங்கும் முழங்கிக் கொண்டே புனிதப் பயணம் புறப்பட்டோம். கோவை அன்பர்கள் கோலாகலமாக வழியனுப்பி வைத்தனர்.



இமாலயப் பயணம்

"ஸ்ரீ சந்திர சேகரானந்த்"

ஹரே ராம, ஹரே ராம,
ராம ராம, ஹரே ஹரே;
ஹரேகிருஷ்ண. ஹரேகிருஷ்ண
கிருஷ்ணகிருஷ்ண, ஹரேஹரே:

பத்து இந்திரியங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், மனம் ஆகிய பதினாறு அவித்யா கலைகளால் மூடப்பட்ட ஜீவனுடைய அஞ்ஞானத்தை நசித்து, கலியின் தோஷம் நீங்கவே இந்தப் பதினாறு நாமாக்களையும் சேர்த்துச் சொல்லவேண்டும். இந்தஸ்தோத்திரம் யோக சாஸ்திர சம்மந்தமான நிவர்த்தி தர்ம உபதேச விஷயமே தவிர, ஜகத் வியாபார உற்பத்தி விபரமல்ல.

அந்தர்யாமியாகிய கிருஷ்ணனை தியானிப்பதால் சர்வ துக்க நிவர்த்தியும், ஆத்மாராம நாமத்தை ஸ்மரிப்பதால் சகல

சுகப் பிராப்தியும் ஏற்படும். கிருஷ்ணன் என்றால் பாபத்தைப் போக்குபவன்; ராமன் என்றால் சந்தோஷத்தோடிருப்பவன். துக்க நிவர்த்தியும், சுகப் ப்ராப்தியுமே மோட்சம்.

மோட்சஇச்சையுள்ள நான்கு வருணத்தாரும் ஹரே ராம, ஹரே கிருஷ்ண நாம ஜெபத்தால் பிராயச்சித்தம் பெற்று, மோட்ச பிக்ஷை பெறலாம்.

பத்து இந்திரியங்கள் தேவர்கள் பஞ்சதன் மாத்திரைகள் பிதுர்க்கள்; மனம் ருசியுள்ள ரிஷி மனிதன். சகல தேவதைகளுக்கும், சகல ரிஷிகளுக்கும், சகலப் பிதுர்களுக்கும் இந்நாம ஜெப தியானத்தால் திருப்திகரமான பிரீதியுண்டாகும்.

மூன்று மாத காலம் அகில இந்திய யாத்திரை செய்துவர, ரயில்வேயில் சர்குலர் டூர் டிக்கட் ரூ. 240/. வீதம் பெற்றுக் கொண்டு, கோவையிலிருந்து பெங்களூர் வந்து சேர்ந்தோம்.

பெங்களூரிலிருந்து ஹைதராபாத் செல்ல ரிசர்வேஷன் கிடைக்கவில்லை. ரயில் பெட்டி வந்து நின்றதும் ஒரு சிறு பெட்டியில் மொத்தபேரும் ஏறி உட்கார்ந்து, பெட்டியில் இரு புறங்களிலுமுள்ள கதவுகளில் Reserved என்று வெள்ளைச் சாக்குக் கட்டியால் எழுதி, அடுத்துத் தொடர்ந்து பிற பிரயாணிகள் ஏறிஉட்புகாதவாறு சுயநலமாக சுவாதீனம் செய்து கொண்டு, மறுநாட் காலை சுகமாக ஹைதராபாத்வந்தடைந்தோம்

ஹைதராபாத்தில் பளிங்குகற்களால்அமைத்த அழகியபிர்லா மந்திரைப் பார்த்தோம். சார்மினர் கோபுரம் ஏறினோம். சாலர் ஜங் மியூசியம்போய்ப் பார்க்க நேரமில்லை. ஆந்திராவின் தலைநகரம் ஹைதராபாத் என்றாலும் செக்கந்திராபாத் சிறப்பாக உள்ளது.

ஹைதராபாத்திலிருந்து டில்லி செல்ல சாதாரண இரண்டாம்வகுப்புப் பெட்டியில் உட்கார இடம் பிடிக்க ஆளுக்கு 5 ரூபாய் போர்ட்டருக்குக் கொடுக்கவேண்டியதாயிற்று. அவன் எங்களை வண்டி பிளாட் பாரத்திற்கு வரும் ஒருமணி நேரத்திற்கு முன்பாகவே ரயில் நிற்கும் இடத்திற்குக் கொட்டும் மழையில் இருட்டில் திருட்டுத்தனமாகக் கூட்டிப்போய் உட்கார வைத்தான். எங்களைப்போலவே வண்டிப் பூராவும் மாமூல் கொடுத்துப் பயணிகள் நிறைந்து விட்டனர்.

வழியில் வார்தா ஸ்டேஷன் வரும்போது பூமிதானஇயக்கம் தொடங்கிய வினோபா பாவேயினுடைய ஆசிரம மண்ணின் வாசனையைச் சுவாசித்தோம்.

ஆக்ராவில் உலக அதிசயங்களில் ஒன்றான பிரமாண்டமான தாஜ்மஹால் யமுனா நதிதீரத்தில் கண்டு பிரமித்தோம். மும்தாஜ் கேட்ட கோரிக்கைக் குறித்து நினைத்தோம், ஷாஜஹானின் காதலை எண்ணி வியந்தோம்.

தாஜ் மஹாலிற்குள் உருது மொழியில் செதுக்கப்பட்டுள்ள குர்ரான் வாசகங்கள் தெளிவாகப் படிப்பதற்கேற்ற வகையில் கீழிருந்து மேலாகப் போக போக எழுத்துக்களைப் பெரிது படுத்திக் காட்டியிருக்கும் ஆற்றல் பாராட்டுக்குரியது.

ஷாஜஹான்கோட்டையைப் பார்த்தோம். சரியான கவனிப்பு இல்லாத காரணத்தால் சாம்ராஜ்யங்கள் சரிந்து விழுந்ததைப்போல பாழடைந்து கொண்டு வருகிறது. உள்ளே செல்ல அனுமதிக் கட்டணம். உள்ளதை விளக்கிக் காட்ட வேறுவழி காட்டிக் கட்டணம். நல்ல பிழைப்பு.

ஷாபூர்ஜ் என்னும் அந்த சிவப்புகல் மாளிகையின் மேல்மாடக் கூடத்தின் உப்பரிகையிலிருந்து விரிந்தசாளரத்தின்வழியே பரந்த யமுனுநதியின் பேரழகையும்,பூரணபௌர்ணமியாய் ஜ்வலிக்கும் தாஜ் மஹாலையும் ஷா ஜஹான் இப்படித் தான் பார்த்து ரசித்திருப்பார் என்று கற்பனைசெய்துஅப்படியே நாங்களும் பார்த்துப் பரவசப்பட்டோம்.

முகலாயதாஜ்மஹால்புகழை முறியடிக்கும் மும்முரத்தில் தயால்பாக் என்ற இடத்தில் ராதாசாமி சமிதி என்ற ஹிந்து மந்திர் ஒன்றை அற்புத சிற்ப வேலைப்பாடுகளுடன் மிக அழகாக உருவாக்கிக் கொண்டு வருகிறுர்கள்.

கோடிக்கணக்கானமூலதனங்கள் முடக்கப்பட்டு பல்லாண்டு காலமாகப் பாடுபட்டு வரும் உழைப்பு தெளிவாகத் தெரிகிறது. அமரர் ராதாசாமி அநுகத ஒலியை தியானித்த மகா யோகி.அவரதுவலுவானஞான சக்தியால்தான் கட்டடம் இவ்வளவு சிறப்பாக அமையலாயிற்று. இன்னும் பூர்த்தியாகவில்லை.

பத்தேபூர் சிக்ரியில் அக்பர் அரசாண்ட அரண்மனையைக் கண்குளிரக் கண்டோம். அவரது கலாரசனை ஒவ்வொரு பிடபத்திலும் பிரதிபலித்தன. மொகலாய சாம்ராஜ்ய சக்ரவர்த்தி அக்பரின் ஆட்சி பெருமையை விரிவாக விவரிக்கும் கோட்டைஇது;

துருக்கி சுல்தானின் மாளிகையில் பூவேலைப் பாடுகளுடைய கற்சுவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டன பஞ்சமஹாலின் அமைப்பு எடுப்பானத்தோற்றமாக இருந்தது. பீர்பால்வீடு கம்பீரமாக எழுப்பப்பட்டிருந்தது. திவான்கள் கூடும்ஆலோசனைக் கூடத்தின் நடுவிலுள்ள கற்தூணின் நுணுக்கமான சிங்கார வேலைப்பாடுகள் நம் கால்களை நகரவொட்டாமல், கண் இமைகளை மூடவொட்டாமல் தடுத்து நிறுத்தி பிரமிக்க வைக்கிறது. ஜோதாபாயின் குளிர் கால, கோடைகால வாசஸ்தல இல்லங்களைக்கண்டு பாராட்டினேம்,

[தொடரும்]



ஒரு ஊரில் இரண்டு பேர் பக்கத்து வீட்டுக் காரர்கள் இரண்டு பேரும் திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து கல்லூரிபடிப்பு முடிய ஒன்றாகவே படித்தார்கள்.

தெய்வம் இருக்கும் திருக்கோயில்

வித்வான் ல. சண்முகசுந்தரம்.

கல்லூரிப்படிப்பு முடிந்து சட்டப் படிப்பிலும் தோழர்களாகவே இருந்தார்கள்.

ஊர் ஒன்று, தெரு ஒன்று, படிப்பும் ஒன்று இப்படியாக இருவரும் ஒன்ருய் வளர்ந்து வந்தார்கள், இருவரும் B. L பரீட்சையில் தேறினுர்கள். இருவரும் ஒரே ஊரில் ஒரே நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருந்து தொழில் நடத்தினுர்.

இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. மூன்ருவது வருடமும் பிறந்து விட்டது. இருவரும் மாவட்ட முன்சீப் தேர்தலுக்கு போனுர்கள். ஒருவர் முன்சீப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்னெருவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

முன்சீப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மளமள வென்று பதவி உயர்வு பெற்று மேலே மேலே போய் விட்டார். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜாகவே உயர்ந்து விட்டார். இப்பொழுது அவரிடம் உள்ள வளம் மட்டும் அல்ல,அதிகாரம்,தோரணை புகழ் அவ்வளவும் வானளாவி நிமிர்ந்துவிட்டன

மற்றவர் வக்கீலாகவே இருந்தார். வக்கீல் தொழிலிலும்ராசியில்லை. வருமானக்காணவில்லை. ஆசிரியர்பயிற்சிக்குப்படித்தார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராக இருக்கிருர்.

நொந்து துவண்டு போன வாழ்க்கை ஆசிரியர் வாழ்க்கை ஏன் இந்த வேறுபாடு என்று கேட்கமுடியுமா? கேட்டாலும் விடை கிடைக்குமா? யாருக்குத் தெரியும் அந்தரிய விடை.

விளாம்பழம் உருண்டு திரண்டிருக்கிறது. களாங்கனி சின்னஞ் சுரேல் என்றிருக்கிறது. ஏன் இப்படி உருண்டிருக்கிறது விளாம்பழம் என்று கேட்க முடியுமா? களாங்கனி இவ்வளவு கருப்பாக இருக்கிறதே ஏன் என்றுதான் கேட்க முடியுமா?

உருண்டிருக்கும் காரணம் விளாம்பழத்திற்கே தெரியாது கருத்திருக்கும் காரணம்களாப் பழத்திற்கும் தெரியாததுதான் பலன் என்னவென்று விசாரிக்க அதிகாரிகள் நாம் அல்ல.

இது சம்பந்தமாகப் பூர்வமான பாடல் ஒன்று, பாடலை அனுபவிப்போம் நாம்.

''வளம்பட வேண்டாதார்
யார்யாரும் இல்லை.
அளந்தன போகா
அவரவர் ஆற்ருன்
விளங்காய் திரட்டினுர்
இல்லை—களங்கனியைக்
காரெனச் செய்தாரும்
இல்''

விளாமரம் நாற்பது அடி உயரம் வளரும். விளாம்பழம் வலுவான ஓடுகொண்டு மூடப்பட்டிருக்கும். ஓடானது கொட்டாங் காய்ச்சி போலிருக்கும் ஓட்டிற்குள் பாகா இருக்கும் பழம்.

விளாம்பழத்தில்உயிர்ச்சத்து நிறைந்திருக்கிறது.இரத்தசுத்தி இரத்த விருத்தி முதலியன விளாம் பழத்தால் ஏற்படும் சில விளாம் பழ ஓட்டை உடைத்துப் பார்த்தால் உள்ளுக்குள் ஒன்றும் இல்லாதபடி வெறுமையாக இருக்கும்.

இத்தகைய விளாம்பழத்தை யானை உண்ட விளாம்பழம் என்பது ஒரு வேடிக்கைதான்.

இனி ஆணவமும் செருக்கும் அழிந்து மனம் பக்குவமான தனி நிலை பெற வேண்டும். அத்தகைய மனத்தைத்தான் இறைவன் வந்து கூடிக்குலாவுவான் என்று ஞானிகள் சொல்வார்கள்.

மனம் அப்படியே இருக்கமனத்துள் இருந்த ஆணவத்தையும் செருக்கையும் துடைத்தெறிந்து விடுவது அற்புதமான சித்துத்தான், இந்த அற்புதமான சித்தை விளாம் பழத்தில் தோடுமூடியே இருக்க உள்ளுக்குள் இருநத பாகு மட்டும் இல்லாமல் போன செயலுக்கு ஒப்பாகச் சொல்லியிருக்கிறது.

பக்குவம் பெற்ற இதயம் (யானை) உண்ட விளாம் பழம் போன்றது என்று சொல்வார்கள்.ஆணவத்தையும்,செருக்கையும் ஒழித்து, இதயம் பக்குவம் பெற வேண்டுமானுல் பக்தியோடு இறைவனுடைய திருநாமங்களை உச்சரிக்க வேண்டும என்று பரஞ்சோதி முனிவர் கூறுகிறூர்.

"ஆன் என்பது தரும் ஐந்தையும்
ஆடும்பெரு மானை
வான் என்பது முதலாகிய
மதுரேசனை வாழ்த்த
யான்என்பதும் என்தென்பதும்
இபம்உண்ட விளாம்நேர்
தான் என்பது குறியாயின
தவம் என்பது அவமே,

யானை உண்ட விளாம்பழம் என்னும் வேடிக்கைத் தொடர் அரிய பெரிய சமயஉண்மையை எடுத்துக் காட்ட உதவுகிறது. அதுவும் ஒரு வேடிக்கைதான். செய்யுள் இலக்கணத்துக்குச் புலவர்கள் சீர்களின் வாய்ப்பாடாக விளாமரத்தை,கூவிள, கருவிள என்று சொல்லியிருக்கிருர்கள்.

களா குத்துச் செடியாக வளரும் மரம். இந்த இனத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு, அலரி, நந்தியா வட்டம் கள்ளி, மந்தாரை, பொன்னலரி குப்பை வேலை (நித்தியகல்யாணி) துண்டம்,பாலை எழிலைப் பாலை முதலிய செடிகள் களாவின் குடும்பத்தைச்சார்ந்தவை

களா மலர் நறுமணம்நிறைந்தது. மல்லிகை மலர் போல் மனங் கமழக் கூடியது. களாக் காய்,ஊறுகாய் போட உதவும் சீப்பு. அகப்பை, முதலிய செய்வதற்கு களாமரத்துக் கம்பு உதுவும.

களாமரத்துக் குடும்பத்தைச் சேர்ந்த செடிகளில் இலை, வேர் முதலியன பொதுவாக நஞ்சுத் தன்மை உள்ளவையாகும.

[தொடரும்]

R. நாராயணசுவாமி,

'' கரிச்சான்குஞ்சு ''

பாண்டிச்சேரி

—x—



பெருமதிப்பிற்குரிய ஞானஸ்ரீயுத ஸநாதனா அவர்கட்கு, வந்தனம்: வாழ்த்துக்கள்.

தங்கள் கடிதமும் யாக்ஞவஸ்யருக்கென அனுப்பிய டிராப்டும் கிடைத்தன, அதைப் பணமாக்கி புகளூருக்கு அனுப்பி விடுவேன். அங்கிருந்து தங்களுக்கு நன்றி வரும். இப்போது அடியேன் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே ஒரு ஸம்ஸார ஸாகரச் சுழல். ஆப்ரேஷன்தான். ஆஸ்பத்திரியில் தான். அன்று காலை முதல் இரவு முடிய ஒரே கவலையும் கண்ணீரும் குழப்பமும்தான். விவேகம் என்னை நிலைகுலையாமல் காத்தது உண்மை. ஆயினும், மனைவி, மக்கள் படும் வேதனையின் அநுதாபம் சற்றே அசைக்கத்தான் செய்தது. இப்போது யாவும் நலம். தாயும் இரட்டைக் குழந்தைகளும் மிகவும் நலத்துடன் உள்ளனர். இரண்டு வாரமாகவே அந்தக் கவலை ஆட்கொண்டு ஆட்டியும் வைத்தது. இப்போது நிம்மதிதான். ஒரு ஞானியிடம் இதைச் சொல்வதில் ஒரு வகை ஆறுதல் உண்டு. ஆகவே உங்கள் தூய சந்நிதியில் இதைத் தெரிவித்தேன். ஒரு பழைய சங்கதி ஞாபகத்திற்கு வருகிறது. மன்னார்குடிக்கு ஸ்ரீ காஞ்சிப்பெரியவர்கள் இருவரும் விஜயம் செய்தனர், பல வருஷங்களுக்குமுன். அப்போது ஊரில் பல வகையிலும் பெரிய மனிதராயிருந்த குன்னியூர் S. ஸாம்பசிவ அய்யர் தானே முன்னின்று, மேனாப் பல்லக்கைத் தன் தோளால் தாங்கி நகரப் பிரவேசம் நடத்தும் வரை செய்து இன்புற்றதுடன், பெரியவாள் உள்பட அனைவரையுமே இன்புறுத்தவும் செய்தார். வரவேற்புக்குழு, காரியக்குழு இரண்டிலும் அடியேனுக்கு இடம் தந்திருந்தனர். பட்டுக்கோட்டை வரையில் உடன் சென்று வழி அனுப்பினோம். பிறகு பெரியவர்கள் இருவரும் இளையாத்தங்குடியில் சென்று தங்கினர். ஸ்ரீ. K. S. S. க்கு வயது நாற்பதுக்குள் தான் இருக்கும். ஒரு தொழிற்சாலைசம்பந்தமாகக் கல்கத்தா போக வேண்டியிருந்தது. பட்டுக்கோட்டையில் பெரிய(பழைய) ஸ்வாமிகளிடம் இதைச் சொன்னார் :''பத்து நாள் கழித்துப் போகலாம்; நேரே ஊருக்குப்போ.'' என்று உத்திரவிட்டார். மன்னார்குடிக்குத் திரும்பி வந்தோம். இரண்டு நாள் கழித்து நானும் இரண்டு நண்பர்களும் இளையாத்தங்குடி சென்று, வழிப்பயணம் செவ்வனே நடந்ததா என்பதை கேட்கவும், செலவுபோக மீதியிருந்த பணம்

கொஞ்சம் ஸமர்ப்பிக்கவும் வந்ததாகக் கூறினோம். இரவு 7½ மணி. அப்போது பெரியவாள் '' உடனே ஊருக்குப் போங்கள்'' என்றார் பிரஸாதம், அக்ஷதை, விபூதி, குங்குமம்கூடக் கொடுக்கவில்லை. நாங்களும் விரைவாக (காரில்). மன்னார்குடிக்கு வந்தோம். மாலை 6 மணிக்கோ, சற்றுமுன்போ ஸாம்பசிவய்யர் இதயக் கோளாறினால் இறந்து விட்டிருந்தார்: நான்கைந்து நாட்களுக்குப் பிறகு நாங்கள் இளையாத்தங்குடிக்குப் போனோம். ஏற்கனவே பெரியவாளுக்கு விவரம் தெரியும். எங்களைக் கண்டதும் மிகவும் அநுதாபத்துடன் எல்லாம் கேட்டார். இடையில், '' அவனுக்கு, ஹார்ட்பைலியரா, ஹார்ட் அட்டாக்கா? '' என்று கேட்டார் மிகுந்த துயரத்துடன் நான் அப்போது என்னையுமறியாமல் சிரித்து விட்டேன் — சற்று இரைந்து. உடனே அவர்களும் சிரித்துக்கொண்டு, ''இவன் எழுத்தாளனேல்யோஒரு ''ஸந்நியாஸிக்கு ஏன்இத்தனைக் கவலையும் அக்கறையும் என்று சிரிக்கிறான்'' என்றார். நான் அதிர்ந்தேபோனேன். உடனே அவரே தொடர்ந்து, '' ஆனா அதுவும் நியாயந்தானே '' என்றார். இதற்கு - இந்த நுட்பமான கேள்விக்கு விடை தெரியவில்லையேஎன்றுதான் நான்சிரித்ததாகச் சொன்னேன். பிறகுஅவர், ஹார்ட் பைலியர், அட்டாக் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிக் கூறினார், கடைசியில் எதற்காக சிந்தனையை நீட்டினேன் என்றால், ஒரு ஞானியிடம் மனச்சுமையை இறக்கினால் மனம் தெளியும் என்பதற்காகவே

பத்திரிகை சம்மந்தமாகத் தங்கள் பணிப்பு ஏதேனும் வரின் ஆவன செய்வேன்.

போதம் பரப்பும் புனிதர் சனு தனர்க்கு
வேதம் உரைக்கும் விழுமிய சொற்களால்
வாழ்த்துக்கள் கூறியும் வந்தனம் செய்துமே
தாழ்த்துகிறேன் என்றன் தலை.

வானத் தமரர்போல் மண்ணில்யாம் வாழ்ந்துவப்ப
ஞான நெறிகாட்டும் ஞானி! சனுதனு!
கீதையைப் பேருரையாய்க் கேட்பிக்கும் கண்ணனே!
தாதையே! நூறாண்டு வாழ்

சாவா மருந்தாம் சனுதன தத்துவத்தை
ஓவாமல் ஒரும் சனுதனரே!—மூவா
பரதத்து வம்போன்றே பாரில் ஒளிர்ந்து
வரம்தந்து வாழ்விப்பீர் எமை

இங்ஙன், அன்பன்

ஆர். நாராயணசுவாமி

''கரிச்சான்குஞ்சு''

பிராணயாமம்

ஸ்ரீ க. அருணசலம் அவர்கள்

காற்றும் மூச்சும் (1)

நாம் வாழும் இவ்வுலகைச் சுற்றிலும் ஒரு காற்றுக் கவசம் அமைந்துள்ளது. இதுவேகாற்று மண்டலம். இக்காற்றில் நைட்டிரஜன் என்னும் உப்புவளி 78.5 சதம் உள்ளது. ஆக்ஸிஜன் என்னும் உயிர்வளி அல்லது பிராணவாயு 20.5 சதம் உள்ளது. எஞ்சிய ஒரு சதம் அபூர்வ வாயுக்களான ஹீலியம், ஆர்கான், நியான், கிரிப்பின் என்பனவாகும்.

உயிரினங்கள் யாவும்சுவாசிப்பதற்குஉயிர்வளி என்னும்பிராணவாயு மிக அவசியமானது. காற்றில் பிராணவாயு இல்லையேல்உலகில்உயிர்வாழ்க்கையே அற்று விடும். பூமியிலிருந்து உயரச் செல்லச் செல்ல காற்றின்அடர்த்திகுறைந்துகொண்டே போகிறது. இதனல் காற்றிலுள்ள பிராணவாயுவின்அளவும் குறைந்து கொண்டே போகிறது. ஒரு உயர்ந்த மலையின் உச்சியில் பிராணவாயு குறைவாகவேயிருக்கிறது. இதனல் தான் மலை உச்சிக்குச்செல்லும் போது மூச்சு விடுவதற்குச்சிரமமாக இருக்கின்றது. காற்று மண்டலத்திற்கு அப்பால்ராக்கட் விமானங்களில் செல்லும் மனிதர் அவர்கள் சுவாசிப்பதற்கு வேண்டிய பிராணவாயுவைத் தம்மோடு எடுத்துச்செல்லுகின்ருர்கள்.

உப்புவளியாகிய நைட்டிரஜன் சுவாசிப்பதற்குப் பயன்படுவதில்லை. மூச்சு வாங்கிவிடும் சமயம் இது அப்படியே உள்ளே போய் வெளியே ஒருமாற்றமும் இல்லாமல் வந்து விடுகிறது. இது தானுகவும் எரியாது. எரியும் பொருளை எரியவும் விடாது இதற்கு முக்கியமான ஒரு உபயோகம் உண்டு. தாவர வளர்ச்சிக்கு நைட்ரேட் உப்புக்கள்

மிகச் சிறந்த உணவாகும். இவ்வுப்புக்கள் காற்றிலுள்ள நைட்ரஜனிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மின்னல்களின்வெப்பத்தால் காற்றிலுள்ள நைட்ரஜன் பிராணவாயுவுடன்கலந்து நைட்ரிக்ஆக்ஸைடுகளாக மாறுகின்றது. இவை மழை நீரில் கரைந்து பூமியைவந்தடைகின்றன. பூமியில் நைட்ரேட்களாக மாறித் தாவரங்களுக்கு உணவாகின்றன.

காற்றில் ஐந்தில் ஒருபாகம் பிராணவாயுவாகவும் ஏனைய நான்கு பாகத்தில் மிகப்பெருமளவு நைட்டிரஜனும் சிறு அளவு வேறுபல அபூர்வ வாயுக்களும் இருப்பதைப் பார்த்தோம். இவ்வாயுக்களின் மூலக்கூறுகள் அசைவற்று இராமல் இங்குமங்கும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இவைகளின் இயக்கம் ஓய்வதுமில்லை ஒழிவதுமில்லை. இவை ஒன்றன் மீதுஒன்று மோதித் திசைமாறி இயங்குவதும் உண்டு. இந்த இயக்கத்தால் அவைகளுக்கு ஆற்றல் உண்டாகிறது. பூமியின் ஈர்ப்பு விசை இவை பூமியை விட்டுஓடிவிடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கின்றது,

காற்றுக்குப் பரவும் தன்மை உண்டு. ஆகவேதான் நமது சுவாசத்தில் உள்மூச்சுக்கும் வெளிமூச்சுக்கும் அவற்றின் தன்மைகளில் வேற்றுமைகாண்கிறோம். இதனை அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

2. சுவாசித்தல்

நாம் சுவாசிக்கும் போது வெளியிலுள்ள காற்றை உறிஞ்சுகிறோம். நமது தேகத்தில் உணவுப் பொருளானது பிராணவாயுவுடன் ஒன்றுசேர்ந்துரசாயன வினைவால் எரிந்து ஆற்றலை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு உணவுப்பொருள்எரியும் போது ரசாசன மாறுதலால் கழிவுப் பொருளானகரியமிலவாயுஉண்டாகிறது. இக்கழிவுப் பொருள் இரத்தத்தின் மூலமாக நுரையீரலுக்குக் கொண்டு வரப்படுகிறது. நாம் சுவாசிக்கும்போது காற்றிலுள்ள பிராணவாயு நுரையீரலிலுள்ள நுண் குழாய்கள வழியாக இரத்தக் குழாய்களுக்குள் செல்கிறது. கழிவுப் பொருளாகிய கரியமிலவாயு நுரையீரலிருந்து வெளிமூச்சின் மூலம் வெளித்தள்ளப்படுகிறது ஆக பிராண வாயுவை நுரையீரல் வழியாக இரத்தத்தோடு செர்ப்பதும் தேகத்தில் உண்டான கழிவுப் பொருளான கரியமிலவாயுவை நுரையீரலிலிருந்து வெளிக்கொண்டு வருவதும் சுவாசித்தலால் நடைபெறுகிறது.

உணவு இல்லாமல் நாம் பல நாட்கள் உயிர் வாழலாம்; ஆனால் சுவாசிக்காமல் 3–4 நிமிடங்களுக்கு மேல் இருக்க முடியாது. ஏன்? ஏதாவதுதடங்கல் ஏற்பட்டு மூச்சு முட்டினால் முகத்தில் நீலநிறம் காண்பது உண்டு.

(தொடரும்)

நாமென்னைத் திருந்தவே! சொல்!

ரஸிகமணி டி.கே.சி

கவிதையிடமோ வேறு கலைகளிடமோ இரண்டு விதமான உண்மைகளை அனுபவிக்கிறோம் ஒன்று நேராகக் காணும் உண்மைகளை அனுபவிப்பது; இது சாமானியமாய் எல்லோரும் அனுபவிக்கக் கூடியது. மற்றையது பாவனை உலகில் காணும் உண்மைகள்.

எப்படியோ, மேல் நாட்டார் நேர்முகமான உண்மைகளையே அனுபவிக்கத் தலைப்பட்டார்கள். அதையே மேலான விஷயமென்றும், மேலான அனுபவித்திற்கு உரிய தென்றும் சொல்லி வந்தார்கள், அந்தப் பாடத்தை நம்மவர்கள் படியாமல் விட்டு விடவா செய்வார்கள்? ''நம்முடைய இலக்கியங்களில் 'ரியலிஸமே' (நேர்முகமான உண்மைகளே) இல்லை, ஸார்! ஏன்வேண்டாத ஆகாயக்கோட்டைகளைக் கட்ட வேண்டும்?'' என்று நம்மவர்களும் சொல்லத் தலைப்பட்டார்கள்.

யானையைப் பற்றி எழுதுகிற தென்றால், நாலுகாலும் ஒரு தும்பிக்கையும் ஒரு வாலும் கொண்ட தாய் பீபிள்ஸ் பார்க்கில் இருக்கிற யானையைப்பற்றி எழுதினால்த்தான் இலக்கியம்; அதனுடைய தும்பிக்கை யாட்டம், வாலாட்டம், இவைகளைப் பற்றிப் பாடினால்த்தான்பாட்டு என்று சொல்லி விடுவார்கள். இந்த தத் சொரூப உலகத்தில் கஜேந்திரனுக்கு இடமெங்கே! ''அதெல்லாம் வேண்டாம். பீபிள்ஸ் பார்க்குக்குவாருங்கள் ஸார்!'' என்று அழைக்கிற காலமாய்ப் போய் விட்டது.

மேலே சொன்ன நேர்முகமான கலைவிளக்கம், அளவு கோலுக்குளவ்வளவுஒத் திருந்த போதிலும் அதில் பாவமே இருந்த போதிலும், ரஸிக உள்ளத்துக்குப் பூர்ண திருப்தியைக் கொடுப்பதில்லை. அளவு கோலை விட்டுக் கொஞ்சமாவது வெளியே போனால்த்தான்கலையாகும்.

உருவச் சிலை விஷயத்திலும் அளவு கோலை விட்டு விட்டு, மேலும் கீழும் போனால்தான் உருவம் கலைப்பண்பு கொண்டதாகும். உண்மையைக் காணும் படி செய்வதற்கு அளவு கொலை நீட்ட வேண்டும் அல்லது குறைக்க வேண்டும்.

தந்தத் தினால் செய்த ஒன்றரை இஞ்சு யானையை எதற்காக வாங்குகிறோம்?

தஞ்சாவூரில் உள்ள நந்தி படுத்திருக்கும் போதே ஆறடி உயரம்; நன்றாய் எழுந்து நின்றாலோ பதினாலு அடி உயரமிருக்கும். இப்போது தெரிய வருகிறது: காளையின்உருவமும் அழகும், கலைஆசிரியர்கள்முதல் குழந்தைகள் வரை அதன் அழகில் ஈடுபடுகிறார்கள் என்பதற்குக் காரணமும் தெரிகிறது.

கலைவிஷயத்தில்அளவுகோலை விட்டு விடுவது ஒரு பக்கமிருக்கட்டும். இனி:

நமது புலனுக்கு நிலைக்களமாயிருக்கிற காரண காரிய உலகத்தை விட்டு வெளியே போவோமானால் அதுவே கலைஞன் ஊடாடுவதற்குத் தகுந்தநிலைக்களமாகும் என்று சொல்லத் தோன்றும். உண்மையான கலையை விரும்பும்போது, நம்மவர்கள் இயற்கை நிகழ்ச்சிக்கு அப்பாலுள்ளஒருஉலகத்துக்கே போனார்கள், அங்கேதான் நம்முடைய பாவனைசக்தி நன்றாய்ப் பறந்து ஓடியாடித் திரியக்கூடும் என்றும் கண்டார்கள்.

உதாரணமாக ஒரு கதை கற்பனை உலகத்திலிருந்து எழுந்த கதை.

1

ஔவைப் பிராட்டி பெரிய புலவர். நல்ல அந்தஸ்துள்ள குடும்ப வாழ்க்கைக்குஉரியவர். ஒரு பெண்ணை அவர் அருமையாய் வளர்த்தார், அந்தப் பெண்ணுக்கு பருவம் வரவும் கலியாணம் செய்ய ஏற்பாடு செய்தார். அதற்காக மண வறை என்ன, சதிர்க் கொட்டகை என்ன, போஜனப்பிறை என்ன, எல்லாம் அமைத்தார். விருந்து நடத்துவதற்கானசகல ஏற்பாடுகளும் செய்தார்.

மேலும்,பனைகளைத் துண்டம் துண்டமாகத் தரித்து,தளத்திற்கு மேல் மூன்றடி உயரம் இருக்கும் படியாகப் பல இடங்களிலும் நட்டு வைத்திருந்தது எதற்காக? இரவு வரவும் விசாலமான மண் அகல்கள்வைத்து, அவற்றில் எண்ணெய் விட்டுப் பருத்திவிதைப் பொட்டணத்தை அந்த எண்ணெயில் ஊற வைத்து எரிய விடுவதற்காகத் தான்(மின்சார விளக்கும் பெட்ரோமாக்ஸூம்இல்லாத காலத்தில் அவைகள்தான் அலங்கார விளக்குகள்), இந்த விதமாகத் தீபத்துக்கு ஏற்பாடுகள்.

போஜன வசதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பட்சணங்கள், பணிகாரங்கள் எல்லாம் யாதொரு குறைவு மில்லாமல் வளமாய்ச் சேகரித்து வைத்திருக்கிறது.

கலியாணம் தை மாசத்தில், முகூர்த்தம் பகல் பன்னிரண்டு மணிக்கு, உற்றார் உறவினர் புலவர்கள் திரள் திரளாக முன் கூட்டியே அங்கே கூடியிருக்கிறார்கள். காலை மணிபத்துஇருக்கும்: ஔவையாரிடம் ஒருவர் வந்து சொல்லுகிறார்:—

''தமிழ் வேந்தர் மூவரும் முகூர்த்தத்துக்கு வந்திருக்கிறார்கள்;இதோ வாசலுக்கே வந்து விட்டார்கள்'' என்பதாக.

அப்படியே வாசலுக்குப்போய் மூவேந்தரையும் கொட்டகைக்கு வரும்படியாக அழைக்கிறார் ஔவையார். அவர்களும் வெண்கொற்றக் குடையாகிய சின்னங்களோடு கொட்டகைக்குள் வந்து நிற்கிறார்கள்.

''ஏதாவது சிற்றுண்டி கொள்ளலாமா?''

என்று கேட்டார் ஔவையார். வேந்தர்களும் ''ஆம், பசியாய் இருக்கிறது,ஏதாவது சாப்பிட்டால்நல்லதுதான்'' என்றார்கள்

''முக்கனிகள் இருக்கின்றன. பால் இருக்கிறது,வேறுபணியாரங்களும் இருக்கின்றன, கொண்டு வரலாமா? '' என்று கேட்டார் ஔவையார்.

அதற்கு வேந்தர்கள் ''அதெல்லாம் வேண்டாம் ஆளுக்கு மூன்று நுங்கு தந்தால் போதும் இளநுங்காக இருக்க வேணும்; தயவு செய்து கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்றார்கள்.

தை மாசத்தில்ப் பனையில் நுங்கு ஏது: கேலியாய்த்தான் கேட்டார்கள் — ஔவையார் பாட்டி அல்லவா? ஔவையார் என்ன செய்தார் என்பதைப் பார்ப்போம்.

வேந்தர்கள் பக்கத்தில் நட்டிருந்த பனம் துண்டத்தைஅவர் பார்த்தார். பாட ஆரம்பித்தார்:—

திங்கள் குடையுடைச்
சேரனும் சோழனும்
பாண்டியனும்

மங்கைக்(கு) அறுகிட
வந்துநின் றார்மணப்
பந்தலிலே;—

சங்கொக்க வெண்குருத்(து)
ஈன்று,

என்று சொன்னவுடனே அந்தப் பனம் துண்டத்திலிருந்து ஒரே வெளுப்பாக ஈட்டிகள் போலக் குருத்தோலைகள் முளைத்து எழுந்தன! இரண்டு நிமிஷம் பொறுத்து,

பச்· சோலை
சலசலத் து,

என்றுபாடினார்.குருத்தோலைகள் எல்லாம் முதிர்ந்த ஓலைகளாய் ஒரே பச்சையாய் மாறி அலைந்து ஆடத் தொடங்கின,

---

அறுகிட: ஆசீர்வதிக்க,

அப்பாவி வேந்தர்கள் என்ன செய்வார்கள்! பனை ஓலையின் சப்தம் சலசல என்று காதிலும் விழுகிறது. அவர்களுடைய அதிசயத்தை அளப்பதற்குஇன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது.

பங்குக்கு மூன்(று)இள
நுங்கிய வேண்டும்
பனந்துண் டமே!

என்று பாடி முடித்தார்.

இப்பொழுது கட்டளைக் கலித்துறையின் முழு உருவத்தையும் பார்க்கலாம்.

திங்கள்க் குடையுடைச்
சேரனும் சோழனும்
பாண்டிய னும்,
மங்கைக்(கு) அறுகிட
வந்துநின் றார்மணப்
பந்தலி லே;—
சங்கொக்க வெண்குருத்து
ஈன்று,பச் சோலை
சலசலத் து,
பங்குக்கு மூன்(று)இள
நுங்கிய வேண்டும்
பனந்துண்ட மே!

இள நுங்குகள் ஒன்பதும் கிடைத்து விட்டன. தமிழ் வேந்தர்கள் பாடு கஷ்டமாய்த்தான் போய் விட்டது. நுங்குகளைத் தின்றாக வேண்டுமே!

தாவர சாஸ்திரமாகிய 'பாட்டனி'க்கு இது மாறான காரியந்தான். ஆனால் பாவனையுலகில், அதாவது கவிதையுலகில்,நன்றாகவே பொருந்தி வருகிறது.

இதோடு இன்னொரு கதை. அதுவும் ஔவையாரை ஒட்டிய தைதான்.

2

தமிழ் வேந்தனும் புலவர்களுமாகச் சேர்ந்து பல விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மைக்கு அபார சக்தியுண்டு என்று சொல்லுகிறார்கள். அந்த உண்மையும் கவி உருவமாக வந்து பேசுமானால் மிக அரிய காரியத்தையே சாதிக்கும் என்று அழுத்தமாய்ச் சொல்லுகிறார்கள். அதன் பேரில் அரசன் ஆயிரம் பொற்காசு கொண்டு வரச் சொன்னான். பட்டுக் கயிற்றால் செய்த வலைப்பை ஒன்றில் அத்தனை காசையும் போடச் செய்தான். போடச் செய்து அதை'இறுகக்கட்டி சபாமண்டபத்தின் உன்னதமான முகட்டில் தொங்க விட்டு சபையோரைப் பார்த்துச் சொல்லுகிறான்:—

''இந்தப் பொன் முடிப்பை லஷ்மி தேவியின் கையிலே ஒப்படைத்திருக்கிறேன், யாரானாலும் கவி பாடலாம், கவியில் உண்மை ஒளி பிறக்குமானால், லஷ்மிதேவி அந்தப் பாடலை ஒப்புக் கொள்வாள்; பொன் முடிப்புத் தானாக அறுந்து கவிஞர் கையில் விழும், ஒரு மாசம் வரை நாம் காத்திருப் போம்

இவ்விதம் சொல்லி விட்டு அரசன் அந்தப் புரத்துக்குப் போய்விட்டான், சபையோரும் கலைந்தார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய அஞ்சல்
கோயமுத்தூர்-641020

15—12—80

அன்பார்ந்த ஸநாதனு,

தங்கள் 9—12—80 தேதி கடிதம் கிடைத்தது. **ஸநாதனு** என்னும் மாத இதழ் வெளியிடுவதை யறிய மிக மகிழ்ச்சி. தங்கள் முயற்சியால் சமுதாயத்தில் நல்ல கருத்துக்கள் பரவி, மக்களின் உழைப்பிலும் பண்பு நிறைந்த கட்டுப்பாடான வாழ்க்கையிலும் நம்பிக்கையுடையவர்களாகவேண்டும். ஆண்டவன் அதற்கு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

அன்பும் வாழ்த்துக்களும்.

தங்கள் அன்புள்ள,

சுவாமி சோமானந்தா.



பாலமுருகனடிமை

இரத்தினகிரி

அருள்திரு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல்-632 517 தமிழ்நாடு.

அன்பிற்கினியீர்!


அருளாசி
தங்களின் இம் முயற்சி மகிழ்வுக்குரியதே!
சிறப்புற தொடர எந்தன் இறைவடிகளை இறைஞ்சி வாழ்த்தும்

பாலமுருகனடிமை
இரத்தினகிரி

75 வது பகவத்கீதை பேருரைகள் நிறைவு விழா


பெண்ணாடம்

அருணா சுகர்ஸ் சேர்மன் திரு. **P. மருதைப் பிள்ளை** அவர்களது ஏற்பாட்டில் பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலை அரங்கில் **75**-வது பகவத்கீதைப்பேருரைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.




9–10–80ம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவுக்கு மலேசியா அமைச்சர் மாண்புமிகு திரு. **S. சாமிவேலு** அவர்கள் தலைமை ஏற்று நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினுர்.

75-ம் ஆண்டில் 3-மாதகாலம் மலேசியாவில் அருட்செல்வர் **ஸநாதனு** நிகழ்த்திய பகவத்கீதைப் பேருரைகளைப்பற்றி அறிந்ததை அறிவித்த அமைச்சர் அவர்கள் மீண்டும் எங்களுடைய நாட்டுக்கு நீங்கள் வருகைதந்து பேருரைகளை நிகழ்த்தவேண்டும் கேட்பதற்கு எங்கள் நாட்டில் மக்கள் உண்டு. கூறுவதற்குத்தான் உங்களைப்போன்றவர்களை எதிர்நோக்குகிருேம் என்று கூறினுர்.



மலேசியாவின் அமைச்சர் மாண்புமிகு திரு. **S. சாமிவேலு** அவர்கள் திரு. **P. மருதைப்பிள்ளை** அவர்களின் சார்பில் அருட்செல்வர் **ஸநாதனு**வுக்கு காணிக்கை வழங்குகிருர்கள்.



"காணவேண்டும் என்று நீர்
கடல் மலைகள் ஏறுவீர்
ஆணவம் அதல்லவோ
அறிவில்லாத மாந்தரே!"

சித்தருடைய பாடல் சிந்தையில் ஒலித்தாலும் காண வேண்டுமென்ற ஆர்வம் மட்டும்எனக்குத் தனிய வேயில்லை நினைவு தெரிந்த நாள் முதலாக சபரி கிரி யாத்திரைபற்றி கேட்ட போதெல்லாம் படித்தபோதெல்லாம் ஐயப்பனுடைய நாமம் காதில் ஒலித்தபோதெல்லாம் காணவேண்டும்— காணவேண்டும் என்று கனவு கண்டேன். அந்தக் கனவு அவ்வளவு சுலபத்தில் நனவாகவில்லை.

இத்துணை ஆண்டுகளாகக் காத்திருக்கும்படி நேர்ந்தது. நம்முடைய பிரயத்தனம் மட்டுமே காலம் மட்டுமே காரியத்தைச் சாதிப்பதில்லை கண்ணுக்குத் தெரியாமல் நமது வாழ்க்கையில் சம்பந்தப் படுகிற அதிருஷ்ட ரூபமான தெய்வமும்சம்பந்தப்பட்டாக வேண்டும் என்பது ஒவ்வொரு காரியத்திலும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது. அது புரிந்து போய் விட்டால் இன்பமும் துன்பமும் இன்றி விருப்பு வெறுப்பு இன்றி உவத்தலும் காய்தலும் இன்றி எல்லாப் பலன்களையும் இறைவனுடைய பிரசாதமாகக்கருதி நிறை வாழ்வு வாழலாம்.

என்னுடைய பிரயத்தனத்தோடு காலக் கணக்கோடுதெய்வமும் ஒன்று சேர்ந்தது, அம்பாசமுத்ரம் தொழிலதிபர் அன்புக்குரிய சோதரர் திரு. A.V.Rm.V சங்கரநாராயண முதலியார் அவர்களிடமிருந்து யாத்திரையில் பங்கு கொள்ள அழைப்பு வந்தது. தெய்வத்தின் அழைப்பாகக் கருதி உடனடியாக ஏற்றுக் கொண்டு விட்டேன் காலமெல்லாம் சில விரதங்களைக் கடைப் பிடிப்பவனுயினும் காலணி அணியாமலும் முகச் சவரம் செய்யாமலும் விரதத்தைத் துவக்கினேன் இருமுடி கட்டிமுறைப்படியாத்திரையை மேற் கொள்ள விரும்பினேன் நினைவெல்லாம் அரி ஹரசுதனை பற்றியதாயிற்று.

2—12—80 ம் தேதி இரவு அலைவாய் அமர்ந்த ஆறுமுகன் ஆலயத்தில் செந்திலாண்டவன் சன்னதியில் ஐயப்பசாமிகளுடன் இருமுடிகட்டி யாத்திரை துவங்கியது பெற்ற அனுபவத்தைப் பிறகு பகிர்ந்து கொள்வோம்.


(தொடரும்)

அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே!

—தாயுமானவர்—

பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும், தத்தம்
கருமமே கட்டளைக் கல்

—வள்ளுவர்—



ராஜபாளையத்தில் நிகழ்ந்த அருட்செல்வர் ஸநாதனுவின்

எழுத்தாளர்கள் உயிர்வாழ வேண்டுமானுல் அவரது நூலை விலைகொடுத்து வாங்கிப் படியுங்கள் படித்தபின்னர் நெருப்பிலிடுங்கள் நண்பர்களுக்கு இரவல் கொடுக்காதீர்கள்

—அறிஞர் ரசுகீன்—

''சுவாமி நீர் ஒரு குரு சாதாரண மனிதரைப் போல பரிகாச வார்த்தை யாடுவதும் சிரிப்பதும் சரியல்ல.'' என்று கூறியவர்களுக்கு சுவாமிஜீ விடுத்த பதில்

'' நாங்கள் ஆனந்தத்தின்
புதல்வர்கள். எதற்காக
நகையில்லாத சோர்ந்த
முகத்தோடு இருக்க
வேண்டும்? ''

நாவுதான் மாந்தனிடம் உள்ள நல்ல உறுப்பு ஆகும் கெட்ட உறுப்பும் அதுவேதான் அது நம் வயமானுல் அதைவிட உயர்ந்த பொருள் இல்லை.

நாம்அதன் வயமானுல்அதை விட தீய பொருள் இல்லை,

—அனூர்கரசு—

மூடிய கைகளுடன்
மனிதன் உலகிற்கு
வருகிறுன். திறந்த
கைகளுடன் அவன்
அதைவிட்டுப் போகிறுன்

—பழமொழி—



76வது ஞான யக்ஞத்தில் பங்குகொண்ட திரளான பெருமக்கள்

வாழி! வாழி!

(சௌந்தரா கைலாசம்)

1) பூதல மாந்தர் எல்லாம்
போற்றியே வணங்கும் கண்ணன்
கீதையை உரைக்கப் பார்த்தன்
கேட்டுயர் வடைந்தான் முன்னம்!
சாதனா ஏடு தோன்றச்
சத்தியக் கீதை இன்று
கீதா விளக்க நாமும்
சிந்தையில் தெளிவு கொள்வோம்!

2) பொய்தனை நீக்கி அந்தப்
பூரணன் கண்ணன் காட்டும்
மெய்தனை உணர்ந்து வாழ்வில்
மேனிலை உலகோர் எய்தச்
செய்திடும் சாதனாவும்
சிறப்புற அதனை நல்கும்
சைதன்ய ரவரும் வேலன்
தந்திடும் அருளால் வாழி!

Edited and Published by Br. Sanathana Chaitanya, on Behalf of Sanathana Sasthralaya, 220, Gandhi Road, Kallakurichi.
Printed by T. Chinnathambi, Thambi Power Press, Kallakurichi.
Honorary Editor Vidvan L. Shanmuga Sundaram.